தென்றல் முல்லை

Tamil Sangam of Greater Washington Inc.

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்க வெளியீடு

Thenral Mullai

A Publication of Tamil Sangam of Greater Washington Inc.

திருவள்ளுவர் ஆண்டு - 2055 | சனவரி 2026 மலர்: 23 இதழ் : 12

உள்ளே...

வாசகர் குரல்: சென்ற	
இதழ் பற்றிய பார்வை	06
இது சுட்டிகளின் பக்கம்	07
அறிவோம்! தெரிவோம்!	08
வரலாற்றுப் பாதையில் ஒரு பயணம்:	
அமெரிக்காவின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள்	10
குடும்பம்	11
குறளோடு ஒரு கதை	12
விடுகதைகள்	13
பொங்கல் வினா விடை மற்றும்	
வார்த்தை தேடல் விளையாட்டு	14
கவினும், அம்மாவும்: உணவே மருந்து	16
மொழியோடு விளையாடு	17
குழந்தைகளின் ஓவியங்கள்	20
என் பொங்கல் பண்டிகை	24
தென்றல் முல்லை — படைப்புகளின் பயணம்!!	24
வெளிச்சம்	26
திரை விமர்சனம்	30
சிறுகதை: வரம்	32
பிரடெரிக் தமிழ்ப்பள்ளியின்	
உலக சாதனையின் பாதையில் சில	
பக்கங்கள் – 2025: ஒரு பெற்றோரின் பார்வையில்...	35
பெண்மை... பெருமை....	36
வாசிங்டன் தமிழ்ச்சங்கத்தின்	
16ஆவது ஆண்டு தமிழிசை விழா	38
குழந்தைகள் தின விழா	41
படைப்பும் படைப்பாளியும்	
கந்தர்வன் அவர்களின் "சாசனம்"	44

பொங்கல் விழா வாழ்த்துகள்

Balagan Business & Tax Service

Balagan Business & Tax Services can provide you with assistance in all your tax, financial, and business affairs - assistance that will improve your total financial well-being.

We want you to get the best financial and tax help possible. If you have a question which is not addressed here, please contact us via

e-mail: questions@balaganfinancials.com

or by phone:

(301) 931-1040/ (703) 723-9471

Please visit our website for more information:

http://balaganfinancials.com/mobile/

தமிழ்ச்சங்கச் செயற்குழு 2025

தலைவர்
திரு. செந்தில் மலைக்கொழுந்து குமார்

துணைத்தலைவர்
திரு. சீனிவாசன் சண்முகம்

செயலாளர்
திரு. அறிவுடை நம்பி புகழேந்தி

துணைச் செயலாளர்
திரு. பாலாஜி துரைசாமி

பொருளாளர்
திரு. மணிமாறன் பாலசுப்பிரமணியன்

துணைப் பொருளாளர்
திருமதி காமேஷ்வரி சந்திரசேகர்

செயற்குழு உறுப்பினர்கள்:

திரு. கொழந்தவேல் இராமசாமி
திரு. எழில்வாணன் கலைவாணன்
திருமதி தீபா செந்தில்நாத்
திரு. பிரகாஷ் மாதேஷ்
செல்வி சுபஸ்ரீ சுசீந்தரன்
செல்வன் அஸ்வின் பாபுவிநாயகம்
திரு. அறிவுமணி இராமலிங்கம்

தலைவர் உரை

பேரன்பு கொண்ட வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்க உறுப்பினர்களுக்கு வணக்கத்தையும், பொங்கல் நல்வாழ்த்துகளையும் செயற்குழுவின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பொங்கல் விழாவில் உங்களை நேரில் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற நமது குழந்தைகள் நாள் விழாவில் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்ட உங்களுக்கும், பல்வேறு வகையில் உதவி செய்த தன்னார்வலர்களுக்கும், தொடர்ந்து பொருளுதவி செய்துவரும் அன்பிற்கினிய ஆதரவாளர்களுக்கும், முன்னின்று உழைத்திட்ட செயற்குழு உறுப்பினர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்விழாவில் தமிழகத்திலிருந்து வந்திருந்த மதுரை முத்து மற்றும் அன்னபாரதி ஆகியோர் வழங்கிய நிகழ்ச்சி மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது. நம் வட்டாரத்தில் வசிக்கும் சிறுவர்களைக் கொண்டு நிகழ்த்தப்பட்ட முழுநேர இன்னிசை நிகழ்ச்சி வெகுசிறப்பாக அமைந்திருந்தது. இந்நிகழ்சியைச் சிறப்புடன் நடத்திக்காட்டிய அந்தச் சிறுவர்களையும், அவர்களைப் பயிற்றுவித்தவர்களையும், இன்னும் இவ்விழாவில் பல்வேறு நிகழ்ச்சிகளை வழங்கிய உங்கள் ஒவ்வொருவரையும் மனதாரப் பாராட்டுகிறேன்.

தமிழர்களின் தனித்துவமான அடையாளமாக விளங்கும் உலகப் பொதுமறையாம் திருக்குறளை, தமிழர் அல்லாதோரும் அறிந்துகொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்ட ஆங்கில ஆவணப்படம் நமது குழந்தைகள் நாள் விழாவில் வெளியிடப்பட்டது. உலகத் தமிழர்களைப் பெருமைப்படுத்தும் இந்த மாபெரும் முயற்சியை முன்னெடுத்து நடத்திக்காட்டிய முன்னாள் தலைவர் திரு. இர. பிரபாகரன் அவர்களுக்கும், மருத்துவர் திரு. விஜய் ஜானகிராமன் உள்ளிட்ட தமிழ் இருக்கை அமைப்பிற்கும், பொருளுதவி நல்கிய பெருமக்களுக்கும் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் நன்றியும்,பாராட்டுகளும்.

நமது சங்கத்தின் சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்படும் தமிழிசை விழா, கடந்த டிசம்பர் மாதம் விமரிசையாக நடைபெற்றது. இந்த ஆண்டு முதன்முறையாக பெரியவர்களுக்கான இசையுடன் பாடும் போட்டியும் நடைபெற்றது. இந்தப் போட்டிகளில் பங்கெடுத்துக்கொண்ட அனைவருக்கும், வெற்றி பெற்றவர்களுக்கும் பாராட்டுகள்.

பொறுப்புத் துறப்பு: புலம் பெயர்ந்த தமிழர்களின், தமிழ் ஆர்வலர்களின் தமிழ் மீது உள்ள ஆர்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களின் படைப்புகள் தென்றல் முல்லை இதழில் வெளியிடப் படுகின்றன. ஆகவே, இந்த இதழில் வந்துள்ள படைப்புகளின் கருத்துகள் யாவும் படைப்பாளிகளின் கருத்துகள் ஆகும். எனவே, அந்தக் கருத்துகளுக்கு வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கமோ அல்லது தென்றல் முல்லை ஆசிரியர் குழுவோ பொறுப்பேற்க இயலாது.

Disclaimer: The views and opinions expressed in articles published in ThenRal Mullai are those of the authors and do not necessarily reflect the official policy or position of Tamil Sangam of Greater Washington Inc or ThenRal Mullai editorial board.

கடந்த ஓராண்டு முழுவதும் சங்கத்தின் வாயிலாக உங்களுக்குப் பணிசெய்யும் வாய்ப்பினை வழங்கிய உங்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.புதிய செயற்குழுவைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைமுறைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த இதழ் உங்களில் கைகளில் தவழும் தருவாயில், தேர்தல் நடைமுறைகள் யாவும் முடிவுபெற்று, 2026-ஆம் ஆண்டிற்கான புதிய செயற்குழுவினர் பொறுப் பேற்றிருப்பார்கள். புதிய செயற்குழுவிற்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த ஆண்டிற்கான உறுப்பினர் கட்டணத்தை ஏற்கனவே செலுத்திவிட்ட உறுப்பினர்களுக்கு நன்றியை உரித்தாக்குகிறோம். இதுவரை உறுப்பினர் கட்டணம் செலுத்தாதவர்கள், தயவுசெய்து இப்போதே செலுத்தி, இந்த ஆண்டு முழுமைக்குமான பலன்களை அனுபவித்திட அன்புடன் அழைக்கிறோம். உங்களின் ஆதரவே தமிழ்ச் சங்கத்தின் முதன்மையான பலம்.

இது நமது சங்கம்! நாம் அனைவரும் அதன் அங்கம்!

தமிழ் வாழ்த்துகளுடன்,

இது நமது தமிழ்ச்சங்கம்! நாம் அனைவரும் அதன் அங்கம்!!
வாழ்க தமிழ்! வளர்க நம் ஒற்றுமை!!

நன்றி வணக்கம்! அன்புடன்,

செந்தில் மலைக்கொழுந்து குமார்
தலைவர், வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம்

Email: president@washingtontamilsangam.org

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்துடன் தொடர்ந்து இணைந்திருங்கள்...

சமூக ஊடகத்தில் உள்ளவர்கள் நம் வாசிங்டன் தமிழ்ச்சங்கத்தின் தமிழ்ச்சங்க முகநூல் (FACEBOOK)/ புலனம் (WHATSAPP) குழுமத்தில் இணைந்திருங்கள். நம் செய்திகளை உங்கள் நண்பர்களுக்கும் பகிருங்கள்.

இணையத்தளம் : WWW.WASHINGTONTAMILSANGAM.ORG
யூடுப் சேனல் : HTTPS://YOUTUBE.COM/C/TSGWTAMILSANGAM
மின்னஞ்சல் : INFO@WASHINGTONTAMILSANGAM.ORG

Instagram
TSGWDC
WhatsApp
Social Media QR Code Connect with Us

Tamil Sangam of Greater Washington Inc.

தென்றல் முல்லை
ஆசிரியர்க்குழு 2025

முதன்மை ஆசிரியர்:
முனைவர் பாலா குப்புசாமி

இணை ஆசிரியர்கள்:
திருமதி விஜயா சிவப்பிரகாசம்
திருமதி ரஹீமா அலாவுதீன்
திருமதி அனிதா மதனகுரு
திருமதி அபிநயா மோகன்குமார்
திரு. கமலபாரதி பச்சியப்பன்
திரு. மோகன்ராஜ் பாலசுப்ரமணியன்
திருமதி மோனிகா ஜெரால்டு
திருமதி பானு கணேஷ்
திருமதி புவனேஸ்வரி இராஜேஷ்குமார்

இளம் துணை ஆசிரியர்கள்:
செல்வி இலக்கியா பாலமுருகன்
செல்வன் ரக்ஷன் சீனிவாசன்
செல்வி கீர்த்தனா கணேஷ்
செல்வி தியா கமலபாரதி
செல்வி சாதனா திலக்
செல்வன் விநாயக் பாபு கணேஷ்
செல்வன் சூர்யா அறிவுமணி
செல்வி ரோஷினி செல்வம்
செல்வி ஆராதனா அருண்
செல்வி மான்சி சந்திரசேகரன்
செல்வி இனயா நிசாமுதீன்

சிறப்பாசிரியர்கள்:
திரு. நாஞ்சில் இ பீற்றர்
முனைவர் மீனாட்சி சந்திரசேகரன்
திரு. இளவழுதி வீரராசு
திருமதி சுமித்ரா பாபு கணேஷ்

செயற்குழு தொடர்பாளர்கள்:
திரு. செந்தில் மலைக்கொழுந்து குமார்
திரு. அறிவுடை நம்பி புகழேந்தி
திரு. பாலாஜி துரைசாமி

முன் அட்டைப்பட ஓவியம்:
செல்வி ஜெசிகா லியோ ஆரோக்கியராஜ்

இதழ் அச்சீடு நன்கொடை:
திரு. குமார் சிவலிங்கம், ipaatti Inc.

வடிவமைப்பு
திரு. இசக்கி, esakki2006@gmail.com
+91 9710755689, +91 9962505384

ஆசிரியர் உரை

உலகில் பிறந்து சிறந்த பல மொழிகளுள், சிறந்தே பிறந்த எம் தாய் மொழியாம் தமிழன்னைக்கும், தமிழுறவுகளுக்கும் வணக்கம்!

முதற்கண் எனதருமை தமிழ்ச் சொந்தங்கள் அனைவருக்கும் ஆங்கிலப் புத்தாண்டு 2026 மற்றும் தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள்!

“மாற்றம் ஒன்றே மாறாதது”!

கடந்த மூன்று வருடங்களில் (2023-2026) புதிய பார்வையுடன், புதுமையான பல அம்சங்கள் அரங்கேற்றப்பட்டது.

1. முதன்முறையாக பத்து இளம் ஆசிரியர்கள் ஆசிரியர்க் குழுவில் சேர்ப்பு
2. ஒவ்வொரு இளம் ஆசிரியர்களுக்கும் குழந்தை வாசகர்களைக் கவரும் விதத்தில் தனித்தனி பகுதிப் பங்களிப்புகள் (section contributions) (இளம் சாதனையாளர் நேர்காணல், தமிழ் வார்த்தை விளையாட்டு, சொல் தேடல், புதிர், விடுகதைகள், பழமொழிகள், குறளோடு ஒரு கதை, படக் கதை, அறிவோம்! தெரிவோம்!, வரலாற்றுப் பயணம், சமீபத்திய நிகழ்வுகள்)
3. இளைய தலைமுறையினரை முன்னிறுத்தி இதழ் தயாரிப்பு
4. நம் வட்டாரக் குழந்தைகளின் சாதனை அங்கீகரிப்பு
5. படைப்பும், படைப்பாளியும்: வாசகர் பார்வை
6. ஒவ்வொரு இதழையும் திறனாய்வு செய்யும் விதத்தில் “வாசகர் குரல்”
7. பெண்மை.. பெருமை.. சாதனைப் பெண்மணிகள் அங்கீகரிப்பு
8. தாய் மண்ணைத் தாண்டியும் தமிழ் வளர்ப்பில்.. என நம் வட்டாரத்துத் தமிழ் ஆர்வலர்களின் தமிழ்த்தொண்டு அங்கீகரிப்பு.
9. வெளிச்சம்: மரபு இசைக்கருவிகளும், கலைஞர்களும்

இவ்விதழும் இளம் எழுத்தாளர்களின் ஆக்கத்தாலும், சிந்தனையாலும், சுட்டிகளின் அருமையான படைப்புகளினாலும் மிகச் சிறப்பாய் வந்துள்ளது. இவ்விதழின் 48 பக்கங்களில் பெரும்பான்மையான சதவீதப் பங்களிப்பு நம் சுட்டிகளுடையது என்பதைப் பெருமையோடு பறைசாற்றுகிறேன்.

பல்சுவை இதழாய் இவ்விதழையும் தந்துள்ளோம், உங்களின் கருத்துகளை எங்களுக்குத் தெரிவியுங்கள். “வாசகர் குரல்” பகுதியில் உங்கள் கருத்துகள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும். இதழை சிறப்பாகக் கொண்டு வர உழைத்த தென்றல் முல்லை சக ஆசிரிய நண்பர்களுக்கும், சிறப்பான படைப்புகளைத் தந்த படைப்பாளிகளுக்கும் என் நன்றிகள். தொடர்ந்து சிந்தியுங்கள்! சிந்தனையை எழுத்தாக்குங்கள்! உங்களின் சிந்தனைகள், படைப்புகள் மற்றும் கருத்துகளை thenral.mullai@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். நமது தென்றல் முல்லை இதழுக்குத் தொடர் ஆதரவு தந்து வரும் நமது வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்க உறுப்பினர்கள், கொடையாளர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு எங்கள் தென்றல் முல்லை ஆசிரியர்க் குழுவின் சார்பாக மனமார்ந்த நன்றிகள்.

தமிழின் தொன்மை!
அதன் வளமை, பெருமை!,
அனைவரின்...
உள்ளங்களிலும் இல்லங்களிலும்
தமிழ் ஒலிக்கட்டும்!
கவின்மிகு தமிழின் புகழ்
தரணியெங்கும் பரவட்டும்!
மனிதம் தழைக்கட்டும்!

தோழமையுடன்...

முனைவர் பாலா குப்புசாமி
முதன்மை ஆசிரியர்

வாசகர் குரல்: சென்ற இதழ் பற்றிய பார்வை

திருமதி பாத்திமா நிசாமுதீன்

"அந்நிய மண்ணில் கோலோற்றும் தமிழ்"

முதல் முறையாகத் "தென்றல் முல்லை" இதழை வாசிக்க வாய்ப்பு கிடைத்தது. இதழின் முதலில், மத்தியில் நவீன ஓவியப் பாணியில் வரையப்பட்ட ஒரு முகம் போன்ற கலைப்படைப்பு உள்ளது. இது என் மகளின் படைப்பு, எனது பெருமைமிகு தருணம். கவிதையின் படைப்பில் உள்ள கனிகளின் புகைப்படங்கள் அழகுற அமைந்துள்ளன. கீழ்ப்பகுதியில் "உள்ளே" என்ற தலைப்பில் கட்டுரைகளின் உள்ளடக்க அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.

தலைவர் உரையில் சங்கத்தின் செயல்பாடுகள், மற்றும் முன்னேற்றங்கள், நிகழ்ச்சிகள், புதிய முயற்சிகள், போன்றவை குறித்து உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. ஆசிரியர் உரையில் இளம் தலைமுறையின் படைப்புகளை ஊக்குவிப்பதாகவும், இதழின் தரமும் ஆசிரியரின் அனுபவமும், அர்ப்பணிப்பும் அங்கீகரிக்கப்படுகிறது. வாசகர் குரல் என்ற தலைப்பில் சென்ற இதழின் மேற்பார்வை கோடிடப்படுகிறது.

சுட்டிகளின் பக்கம், புத்தகங்களில் தொடங்கிய பயணம், பண்பாடாக வளர்ந்து, சிந்தனையாக விரிந்து, சாதனையாய் மலர்கிறது. செல்வி மான்சியின் படைப்பு இரண்டு மொழிகளின் கற்கும் திறனை மேம்படுத்திக் காட்டுகிறது, இரு முகங்கள் ஒரே கனவுடன். இதுபோன்று அவர்களுடன் விளையாடும் போது நாம் வாழக் கற்றுக் கொள்கிறோம், சிரித்தபடி சிந்திக்க, சிந்தித்தபடி வளர. "ஜெனரேஷன் ஜி ஏற்படுத்தும் புரட்சி" இளம் தலைமுறையின் நம்பிக்கை, சிந்தனைத் திறன் மற்றும் எதிர்காலச் சமூக மாற்றத்தை உருவாக்கும் சக்தியாக தம் கருத்துக்களை முன்வைக்கிறது.

"தமிழ் இலக்கிய வினாடி வினா 2025" மூத்த தலைமுறையையும், இளைய தலைமுறையையும் இணைத்து தமிழ் மொழி, இலக்கியம், கல்வி, மூன்றையும் ஒரே மேடையில் கொண்டு வந்த உற்சாகமான பங்களிப்பாகத் திகழ்கிறது. "குறளோடு ஒரு கதை" யார் அறிவுடையவர்? என்ற தலைப்பு, வேகமாக வாழும் காலத்தில் ஆழமாக சிந்திக்கக் கற்றுக் கொடுக்கிறது. குழந்தைகளின் பல வண்ண ஓவியங்கள் நாம் மறந்து போன நம் உள்ளத்தில் முதல் வண்ணங்கள். குழந்தைகளின் ஓவியம் ஒரு மொழி. எழுத்துகள் இல்லா உணர்ச்சிகளின் இலக்கணம்.

மருத்துவர் பா. இராதாகிருஷ்ணன், மெக்னீசியம் (வெளிமம்) உடல் நலத்திற்கு உறுதுணை என்ற கட்டுரையில் அறிவியல் ஆதாரத்துடன் பொதுமக்களுக்குப் புரியும் மொழியில் பயனுள்ள சுகாதார விழிப்புணர்வை அளிக்கும் ஒரு சிறப்பான மருத்துவக் கட்டுரையாகத் திகழ்கிறது. திருமதி பொன்மொழி திருநாதன் அவர்களின் மனச்சோர்வு பகுதியில், மனச் சோர்வை அடையாளம் காணவும், அதிலிருந்து மீளவும் உதவும் ஒரு விழிப்புணர்வு மற்றும் வழிகாட்டிக் கட்டுரை என்பது இதன் பெரிய சிறப்பாகக் கருதப்படுகிறது.

"சமீபத்திய திரைப்படங்கள் ஒரு பார்வை" என்ற தலைப்பில் இது ஒரு சாதாரண சினிமா விளம்பரமோ அல்லது கட்டுரையோ அல்ல. நாம் சற்று நின்று யோசிக்க வேண்டிய சமூகக் கேள்விகளை எழுப்பும் முயற்சி என்று நினைக்கிறேன். "ஆண்டுவிழா 2025" பிரடெரிக் தமிழ்ப்பள்ளி என்ற தலைப்பில் அந்நிய நாட்டில் நம் தாய்மொழியாகிய தமிழ் மொழியின் பண்பாட்டை வளர்க்கும் நோக்கமாகவும் மற்றும் மாணவர்களின் முன்னேற்றம், சமூக ஒற்றுமை மற்றும் பிரடெரிக் தமிழ்ப்பள்ளியின் பெருமை ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது.

"வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்க முத்தமிழ் விழா" தமிழர் பண்பாடு உயிர்ப்புடன் தொடர்வதைப் பதிவு செய்யும் சமூகப் பண்பாட்டு ஆவணமாகத் திகழ்கிறது. இதில் பங்கேற்ற பத்திரிக்கைத் துறையின் பிரபலம், திரு. நக்கீரன் கோபால் அவர்களுக்குச் சங்கம் சார்பில் சிறப்புப் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. அவர்களுடைய தைரியமான நேர்காணல், திருமதி நிர்மலா பெரியசாமி அவர்களின் பேச்சு, கவிஞர் சினேகன் அவர்களின் கவியரங்கம் ஆகியவை சிறப்புமிக்கதாக விளங்குகிறது.

பாவண்ணன் அவர்களின் "சாம்பல்" என்ற கட்டுரை, ஒரு தனிநபர் அனுபவத்தையும், சமூக யதார்த்தத்தையும் இணைக்கும் சிந்தனை எழுத்தாக அமைந்துள்ளது. சமூகத்தை விமர்சிப்பதோடு மட்டுமல்லாமல், தன்னாய்வு செய்யும் மனநிலைமையையும் வாசகர்களுக்குள் உருவாக்குகிறது. "நீயே உனக்கு"," தமிழ் கொடுத்த தன்னம்பிக்கை" கவிதை நடைத்தொகுப்பு சிறப்பாக உள்ளது. "பெண்மை பெருமை" பகுதியில் திருமதி இரஹீமா அலாவுதீன் அவர்கள் பெண்ணின் வாழ்க்கை, போராட்டம், பெருமை ஆகியவை சிதறாமல் ஒரே கோட்டில் முன் வைக்கிறார். இதில் அதிக அலங்காரம் இல்லாமல் உண்மை உணர்வைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

உதயமாகிறது "ஒருங்கிணைந்த மருத்துவத்திற்கான திருமூலர் தமிழ் இருக்கை" என்ற பதிவு, தமிழ் மொழியை அறிவியல், மருத்துவம் மற்றும் மன- உடல் நல ஆய்வுகளோடு இணைக்கும் முயற்சிகளை மையமாகக் கொண்டுள்ளது. திருமூலர் சித்தாந்தம், யோகா, மூச்சுப் பயிற்சி, தியானம் போன்ற பாரம்பரிய அறிவுகள், இன்றைய நவீன மருத்துவ மற்றும் நரம்பியல் ஆய்வுகளுடன் இணைக்கப்படுகின்றன என்பதைக் கூறுகிறது. அமெரிக்காவில் (MUSC) கல்வி ஆய்வு நிறுவனங்களில் நடைபெறும் Integrative Therapies மற்றும் Mind Body Medicine தொடர்பான ஆய்வுகள் எடுத்துக்காட்டாக விளக்கப்படுகின்றன. தமிழை ஒரு மொழியாக மட்டுமல்ல மனித நலனுக்கான அறிவியல், ஆன்மீகப் பாலமாக, உலக அரங்கில் நிறுவும் முயற்சிகளை சுருக்கமாகவும், தெளிவாகவும் முன் வைக்கிறது. "கோடை மகிழ்வுச்சுற்றுலா 2025", மகிழ்ச்சியும் சமூக இணைப்பும் நிறைந்த அனுபவத் தொகுப்பு.



"வாழ்க தமிழ்! வளர்க தமிழ்ச்சங்கம்!"

சுட்டிகளுக்காக... சுட்டிகளோடு.... சுட்டிகளால்...

இது சுட்டிகளின் பக்கம்

(இளம் துணை ஆசிரியர்களால்)

அறிவோம்! தெரிவோம்!



வணக்கம், முதலில் இனிய புத்தாண்டு வாழ்த்துகள்! இந்த அறிவோம்,தெரிவோம் பகுதியில், நாம்தமிழர்கள் எனப்பெருமையாகச் சொல்லிக் கொள்ளுவதற்கு நம் சங்க இலக்கியங்கள், மரபுக் கலைகள், வழக்கு மொழி, நாகரிகம், பண்பாடு, வளர்ச்சி, வாணிபம் எனப் பலப்பல சொல்லிக் கொண்டே போகலாம்.. அதில் இன்று நாம் தெரிந்து கொள்வது திரைகடலோடியும் வாணிபம் செய்த நமது தமிழர்கள், அவர்கள் சென்ற நாடுகளைப் பற்றியும் அறிந்து, தெரிந்து கொள்வோம். இதை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி! என்னோடு வாங்க படிக்கலாம்!!

திரைகடலோடியும் வாணிபம் செய்த நமது பெருமை வாய்ந்த தமிழின உலக வரைப்படம்

செல்வி மான்சி சந்திரசேகரன்

நாடுகளுடன்

1. அருபா (நெதர்)
2. அல்பேனியா
3. அன்ரிகுவா-பார்புடா
4. அன்ரில்லிஸ் (நெதர்)
5. அஸெர்பைஜன்
6. ஆர்மினியா
7. ஆஸ்திரியா
8. இஸ்ரேல்
9. ஈகுவரோறியல் கினீயா
10. எரித்திரியா
11. காம்பியா
12. கிறெனடா
13. கினீயாபிஸ்ஸாவ்
14. குரோசியா
15. குவாடி லோப் (பிரா)
16. கேமன் தீவுகள் (பிரி)
17. கொங்கோ
18. கொசொவோ
19. சான் மறினோ
20. சுலோவாக்கியா

21. சுலோவேனியா
22. செக்
23. செர்பியா
24. சென் வின்சென்ற் கிறெனடயின்ஸ் தீவுகள்
25. சென்கிற்ஸ் - நெவிஸ் தீவுகள்
26. சைப்ரஸ்
27. டொமினிகா
28. துருக்க கைகோஸ் (பிரி)
29. நிய்யு (நியுசி)
30. பார்படாஸ்
31. பாலஸ்தீனம்
32. புர்கினோ பாசோ
33. புறுண்டி
34. பெனின்
35. பொஸ்னியா ஹெர்ஸ கோவினா
36. போர்ற்றோரிக்கே (அமெ.மா)
37. மசிடோனியா
38. மார்ற்றினிக் (பிரா)
39. மான்தீவு (பிரி)
40. மெலில்லா (ஸ்பெ)
41. மொன்செற்று (பிரி)
42. மொன்ரெநீகிறோ
43. ரினிடாட் ரொபாகோ
44. ரோகோ
45. லக்செம்போர்க்
46. லெபனன்
47. லைச்ரென்ஸ்ரெயின்
48. வத்திக்கான் நகர்
49. வலிஸ்-பியுடுனா (பிரா)
50. வெர்ஜின் தீவுகள் (அமெ.மா)
51. வெர்ஜின் தீவுகள் (பிரி)
52. றுவாண்டா
53. ஜிபுற்றி
54. ஜோர்டான்
55. ஜோர்ஜியா

என்னங்க வியப்பாக இருக்குதா! எனக்கும்தாங்க!!! இதைப் படித்த போது மிகவும் மலைப்பாகவும், வியப்பாகவும் இருந்தது. நானும் படித்ததும் அந்த காலகட்டத்திற்கே கொஞ்ச நேரம் போய்வந்தேன். உடனே அத வேற எங்க பகிர்ந்து கொள்ள முடியும்? இதோ உங்களோடதான். கடந்த மூன்று வருடங்களா உங்களுடன் நான் அறிவோம், தெரிவோம் பகுதியில் பகிர்ந்து விவரங்களைப் பறிமாறி வருவது என் மனதிற்கு ஒரு இனிமையான தருணம். இதை ஊக்குவிக்கும் உங்களுக்கும் எனது தென்றல் முல்லை ஆசிரியர் திரு. பாலா அங்கிளுக்கும் மற்றும் தமிழ்ச் சங்கத்திற்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துகளுடன் எனது அன்பான நன்றிகளும்.

சரிங்க அடுத்த தென்றல் முல்லை இதழில் அறிவோம்! தெரிவோம்!! பகுதியில் சந்திப்போம். அதுவரை உங்களிடம் இருந்து விடை பெறுவது உங்கள் மான்சி சந்திரசேகரன்.

வரலாற்றுப் பாதையில் ஒரு பயணம்:
அமெரிக்காவின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள்

செல்வி இனயா நிசாமுதீன்

வணக்கம் அன்பான வாசகர்களே! இந்த இதழின் மூலம் அமெரிக்காவின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைப் பற்றி அறிமுகப் படுத்துவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். இன்று, அமெரிக்காவின் வரலாற்றைப் பிரதிபலிக்கும் இரண்டு முக்கியமான வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை மற்றும் அவற்றின் சிறப்புகளைச் சுருக்கமாகப் பார்க்கலாம்.

சுதந்திரச் சிலை (Statue of Liberty)

அமெரிக்காவின் சுதந்திரம், சமத்துவம் மற்றும் ஜனநாயகத்தின் உலகளாவிய சின்னமாக விளங்கும் சுதந்திரச் சிலை, நியூயார்க் நகரின் லிபர்டி தீவில் அமைந்துள்ளது. 1886ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் நட்புறவின் அடையாளமாக அமெரிக்காவுக்கு வழங்கப்பட்ட இந்தச் சிலை, சிற்பி ஃப்ரெடெரிக் ஆகஸ்ட் பார்தோல்டி அவர்களால் வடிவமைக்கப் பட்டு, அதன் உள் அமைப்பை குஸ்டாவ் ஐஃபெல் உருவாக்கினார். செம்பால் செய்யப்பட்ட இந்தச் சிலை காலப் போக்கில் பச்சை நிறத்தைப் பெற்றது.

சிலையின் கையில் இருக்கும் தீபம் நம்பிக்கை மற்றும் அறிவின் ஒளியைக் குறிக்கிறது. இடது கையில் பிடித்திருக்கும் பலகையில் *"July 4, 1776"* எனும் தேதி, அமெரிக்க சுதந்திர அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளை நினைவூட்டுகிறது. காலடியில் காணப்படும் உடைந்த சங்கிலிகள் அடிமைத்தனத் திலிருந்து விடுதலை பெற்றதைக் காட்டுகின்றன. கோடிக் கணக்கான குடியேற்றர்களுக்கு புதிய வாழ்க்கையின் தொடக்கமாக இருந்த இந்தச் சிலை, இன்று உலகின் பல பகுதிகளில் இருந்து ஒவ்வோர் ஆண்டும் சுமார் 40 முதல் 50 இலட்சம் பேர் வந்து பார்வையிடும் ஒரு முக்கியமான வரலாற்றுச் சின்னமாகத் திகழ்கிறது.

ஹார்பர்ஸ் ஃபெரி (Harpers Ferry)

மேற்கு வெர்ஜீனியா மாநிலத்தில், போடோமேக் மற்றும் ஷெனாண்டோவா நதிகள் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ள ஹார்பர்ஸ் ஃபெரி, அமெரிக்க வரலாற்றில் முக்கியமான இடமாகும். அதன் புவியியல் முக்கியத்துவம் காரணமாக, இது தொழில் மற்றும் இராணுவ மையமாக வளர்ந்தது. இங்கு இருந்த அரசின் ஆயுதத் தொழிற்சாலை, நாட்டின் ஆரம்ப கால தொழில்துறை வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தது.1859ஆம் ஆண்டு ஜான் ப்ரவுன் நடத்திய அடிமைத்தனத்திற்கு எதிரான தாக்குதல், இந்த இடத்தை வரலாற்றில் நினைவுறுத்தத் தக்கதாக மாற்றியது. இந்த நிகழ்வு அமெரிக்கச் சமூகத்தில் அடிமைத்தனத்திற்கு எதிரான போராட்டத்தை தீவிரப்படுத்தி, பின்னர் உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்தது. இன்று ஹார்பர்ஸ் ஃபெரி ஒரு தேசிய வரலாற்றுப் பூங்காவாக பாதுகாக்கப்பட்டு, வரலாறும் இயற்கையும் இணையும் கல்வி மையமாகத் திகழ்கிறது. இந்த இடத்தை ஒவ்வோர் ஆண்டும் சுமார் 8 முதல் 10 இலட்சம் பேர் வந்து பார்வையிடுகின்றனர்.

அப்பா

அ – அன்பின் ஆழம் காட்டும் முகம்
ஆ – ஆற்றலாய் நின்று வாழ்வை வழிநடத்தும் நிழல்
இ – இடரிலும் தளராது தாங்கும் இதயம்
ஈ – ஈரமாய் பொழியும் கருணை மொழி
உ – உலகை அறிய உற்சாகம் தந்த குரல்
ஊ – ஊக்கமாய் உயரச் சொல்லும் பார்வை
எ – எதிலும் நேர்மை கற்றுத் தந்த ஆசான்
ஏ – ஏற்றத்திலும் இறக்கத்திலும் துணை நின்ற தோள்
ஐ – ஐயமின்றி நம்பிக்கையை விதைத்தவன்
ஒ – ஒளியாக வழிகாட்டும் வாழ்க்கை விளக்கு
ஓ – ஓயாமல் உழைத்து கனவுகளை நெய்தவன்
ஔ – ஔவையென ஞானம் தந்த அப்பா

செல்வி இனயா
நிசாமுதீன்

மகிழ்ச்சியின் ரகசியங்கள்

மகிழ்ச்சி சிறு தருணங்கள் மறைந்து மெதுவாய்வரும்
காலை ஒளி போல. இதயத்தை இன்பம் செய்யும்
நல்ல சொற்கள் சொன்னால் மனம் மலர்வது
துயரமும் கொஞ்சம் கொஞ்சம் குறைவது

புன்னகை பகிர்ந்தால் நாள் சிறப்பாகும்
சிந்தனை அமைந்தால் வருகை நேரமாகும்
அழைக்காமலே மகிழ்ச்சி அருகில் வரும்
நம் மனதில் இருந்தால் அது நிற்கும்

செல்வி மிருதுளா
வாசுதேவன்

குடும்பம்

செல்வி லக்ஷிதா சிவகுமார்

தூரம் விலகாது இருக்கும் ஒரு அன்பு,
மென்மையான காற்றில் புன்னகைகள் பறக்கும்.
சமமான மனசான சொற்களில் ஒலிக்கும் குரல்,
அது குடும்பத்தை அலைமோதும் மந்தைகளாக்கும்.

வாழ்க்கை அலைபோல் வந்தாலும்,
உன் நிலைத்திருக்கும் இருப்பு எனை அரவணைக்கும்.
சில நேரம் கடினமாய் வரும் பாதைகள்,
ஆனால் நாமும் புதிதாய் மலர்வோம் மீண்டும் மீண்டும்.

மின்மினுக்கும் கனவுகள் நம்மை முன்னோக்கிச் சுழலும்,
ஒன்றிணைந்து நாமே திறமையை உருவாக்குவோம்.
உணவு மேசையில் சிரிப்புகள் மலரும்,
இதைப் போலவே பச்சைச் செடி வளர்கிறது.

சிறு கதைகள் முதல் பெரிய நினைவுகள் வரை,
வாழ்க்கை நிறைய நினைவுகளை அருள்கிறது.
பிரிவின் சுலபம் உனக்கில்லை,
ஏனெனில் இன்னும் செய்ய வேண்டியவை நிறைய.

பட்டாணி துளிகள் பிய்க்கும் நேரம் போல,
உன் இருப்பு குடும்பத்தின் ஒற்றுமையைப் பொறுக்கும்.
குடும்பமே நம் உயிரின் முழுமை,
அதில்தான் இதயம் ஒன்று சேர்கிறது.

உலகம் குளிர்ச்சியாக உணர்ந்தாலும்,
உன் ஒளி நம்மை வழிநடத்தும் இடத்திற்கே கொண்டுசெல்லும்.

குறளோடு ஒரு கதை

ஆறுவது சினம் கூறுவது குறள்

தமிழ் ஆக்கம்: தியா கமலபாரதி
(மூலம்: லியோ டால்ஸ்டாய் சிறுகதைகள்)

செல்வி தியா கமலபாரதி

ஒரு அழகிய பின்பனிக் காலத்தின் ஆரம்பம். பனி உருகி, கிராமத் தெருவில் ஓடும் சிறு ஓடைகளாக நீர் பாய்கிறது.

அகிலா மற்றும் மாலா என்ற இரண்டு சிறுமிகள் பள்ளியிலிருந்து திரும்பி வருகின்றனர்.

அகிலா கொஞ்சம் பெரிய பெண், வயதில் மூத்தவள். அன்று அவள் மஞ்சள் நிற உடை அணிந்திருக்கிறாள். மாலா வயதில் இளையவள். அன்று நீல நிற உடை அணிந்து, தலையில் சிவப்பு துணி கட்டியிருக்கிறாள்.

வீட்டிற்கு வந்தவுடன், மாலா உருகி ஓடும் தண்ணீர் தேங்கியுள்ள குழியில் இறங்கி விளையாடப் போகிறாள். அகிலா குளிர்ந்த தண்ணீரில் விளையாட வேண்டாம் என அவளைத் தடுக்கிறாள். ஆனால் மாலா கேட்காமல் குழியில் இறங்கி தண்ணீரில் குதிக்கிறாள். அந்த நீர் சிதறி அகிலாவின் உடையிலும் முகத்திலும் மண்ணுடன் தெறிக்கிறது.

இதைக் கண்டுஅகிலா கோபமடைந்து மாலாவை அடிக்க ஓடுகிறாள்.

மாலா தப்பித்து தூரமாக ஓடி விடுகிறாள்.

அந்த நேரத்தில் அகிலாவின் அம்மா வந்து, உடை அழுக்காக இருப்பதைக் கண்டு அவளைத் திட்டுகிறாள். அகிலா நடந்ததைக் கூறி, “மாலாதான் இதைச் செய்தாள்” என்று சொல்கிறாள். அகிலாவின் அம்மாவிற்கு கோபம் தலைக்கேறுகிறது. அகிலாவின் அம்மா மாலாவை கூப்பிட்டுத் திட்டுகிறாள். என்ன செய்வது என்று தெரியாமல் மாலா அழுகிறாள். மாலாவின் அம்மா வெளியே வந்து மாலா அழுவதைப் பார்த்து, “மாலா சின்னப் பெண். அவளை எப்படி நீங்கள் திட்டலாம்?” என்று கூறிச் சண்டையிடுகிறாள்.

இரு அம்மாக்களும் சத்தமாக சண்டையிட, இதைக் கேட்டு அப்பாக்களும் அங்கே வருகின்றனர். நடந்ததை அறிந்து அவர்களும் தங்கள் கருத்துகளைச் சொல்ல, சண்டை மேலும் பெரிதாகிறது.

அகிலாவின் பாட்டி சண்டையை நிறுத்தப் பார்க்கிறாள். ஆனால் சண்டையின் நடுவே சென்ற பாட்டியை அவர்கள் கீழே தள்ளிவிடுகிறார்கள்.

இந்தச் சண்டை நடந்து கொண்டிருக்கும்போது, அகிலா தண்ணீர் தேங்கிய குழியை வெட்டி கால்வாய் போல் கட்டத் தொடங்குகிறாள். மாலாவும் அவளுடன் சேர்ந்து கால்வாய் கட்ட உதவி செய்கிறாள். இருவரும் சேர்ந்து கட்டிய கால்வாயின் நீர் சண்டையிட்டுக் கொண்டிருந்த பெற்றோர்களின் கால்களை நனைக்கிறது. இதைக் கண்ட பெரியவர்கள் அதிர்ச்சியடைகிறார்கள். இந்தச் சின்னப் பிள்ளைகளுக்காக சண்டையிடுவது தவறு என்பதை உணர்கிறார்கள். குழந்தைகள் எவ்வளவு சீக்கிரம் கோபத்தை மறந்து ஒன்று சேர்ந்து விட்டார்கள் என்பதைப் பார்த்துத் தாங்களும் மனம் திருந்தி, வெட்கப்பட்டு அவரவர் வீட்டிற்குச் சென்றார்கள்.

அறத்துப்பால்: துறவறவியல் - அதிகாரம்: வெகுளாமை.

குறள் 303:

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்.

பொருள்: வலியார், ஒப்பார், எளியார் என யார்மீது கோபம் கொண்டாலும் அதை மறந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் அந்தச் சினமே தீய விளைவுகளுக்குக் காரணமாகும்.

இந்தக் கதை லியோ டால்ஸ்டாய் அவர்கள் எழுதிய “*Wise little girls*” என்ற கதையின் தமிழாக்கம். உலகின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராகக் கொண்டாடப்படும் லியோ டால்ஸ்டாய் அவர்கள் தன்னுடைய கதைகளில் வரும் நீதிக் கருத்துகளை ஜெர்மன் மொழியில் வாசித்த திருக்குறளில் இருந்து கற்றுக் கொண்டதாகக் கூறி இருப்பது திருக்குறளுக்கும் தமிழுக்குமான சிறப்பு.



விடுகதைகள்

தொகுப்பு: செல்வி ஆதனா பிரேமானந்த்

1. எனக்கு 2 கைகள் உண்டு, ஆனால், கை தட்ட முடியாது. நான் யார்?
2. என்னால் ஓட முடியும், ஆனால் நடக்க முடியாது. எனக்கு வாய் உண்டு, ஆனால் பேச முடியாது. நான் யார்?
3. எனக்கு ஒரு கண் உண்டு, ஆனால் எனக்கு கண் தெரியாது. நான் யார்?
4. எனக்கு 5 விரல்கள் உண்டு, ஆனால் கை இல்லை. நான் யார்?
5. எனக்கு நகரங்கள் உண்டு, ஆனால் வீடுகள் இல்லை. காடுகள் உண்டு, ஆனால் மரங்கள் இல்லை. ஆறுகள் உண்டு, ஆனால் தண்ணீர் இல்லை. நான் யார்?
6. எனக்கு கால்கள் உண்டு, ஆனால் நடக்க முடியாது. நான் யார்?
7. என்னால் வாய் இல்லாமல் பேசமுடியும், உடல் இல்லை, ஆனால் காற்றில் உயிர் வாழ்வேன். நான் யார்?
8. நான் சிறகில்லாமல் பறக்கலாம், கண்ணில்லாமல் அழலாம். நான் யார்?
9. என்னை உடைத்தால் தான் பயன்படுத்த முடியும். நான் யார்?
10. எனக்கு உயிர் இல்லை, ஆனால் வளர முடியும். எனக்கு காற்று தேவை. நான் யார்?

தொகுப்பு: செல்வி காவியா

11. இரவில் என்ன பேசும்?
12. எது கடல் அல்ல, ஆனால் தண்ணீர் எடுப்பது?
13. நான்கு கால்கள், இரு தலை எது?
14. எது காற்றில் பறக்கிறது, ஆனால் அதுவும் பாதிக்காது?
15. அடித்தாலும் உதைத்தாலும் அழ மாட்டான் அவன் யார்?
16. பற்கள் இருக்கும் கடிக்க மாட்டான் அவன் யார்?
17. தலை இல்லாதவன் தன்னையே சுமப்பவன் அவன் யார்?
18. காற்றைக் கொடுத்து காற்றில் பறப்பான் அவன் யார்?
19. சிறு தூசி விழுந்ததால் குளமே கலங்கியது அது என்ன?
20. செய்வதைச் செய்யும், குரங்கும் அல்ல, சிங்காரிக்க உதவும் சீப்பு அல்ல?

விடைகள்: 14ம் பக்கம் பார்க்க

பொங்கல் வினா விடை மற்றும் வார்த்தை தேடல் விளையாட்டு

கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடைகளைக் கண்டுப்பிடித்து, அவற்றைக் கட்டத்தில் தேடி வட்டமிடுக.

செல்வன் ஸ்ரீருத்ரேஷ் மணிவண்ணன்

1. பொங்கலில் இனிப்புச் சுவைக்காக சேர்க்கப்படுவது - வெ _ _ ம் (4)
2. சர்க்கரை இதில் இருந்து தான் எடுக்கப்படுகிறது - க _ _ பு (4)
3. பொங்கலுக்கு அடுத்த நாள் எந்த தமிழ்ப் புலவரின் தினமாகக் கொண்டாடப்படுகிறது? - தி _ _ _ _ _ ர் (7)
4. பொங்கலுக்கு மறுநாள் கொண்டாடப்படும் விழா - மா _ _ _ _ _ _ல் (8)
5. பொங்கல் திருவிழாவின் போது நடத்தப்படும் தமிழ்நாட்டின் பாரம்பரிய காளையை அடக்கும் வீரவிளையாட்டு - ஜ _ _ _ _ _ டு (7)
6. பொங்கல் வைக்கும் புதுப் பானையில் இதை கட்டிவைப்பது பாரம்பரியம் - ம _ _ _ _ _ து (7)
7. பொங்கல் கொண்டாடப்படும் மாதத்திற்கு முந்தைய மாதம் - மா _ _ ழி (4)
8. விழா என்ற வார்த்தைக்கு இன்னொரு தமிழ் வார்த்தை - ப _ _ கை (4)
9. ஆந்திரா, மற்றும் கர்நாடகா மாநிலங்களில் பொங்கல் பண்டிகை எவ்வாறு அழைக்கப்படுகிறது? ம _ _ _ _ _ _ _ தி (9)
10. மக்கள் தங்களுடைய உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று அவர்களைக் கண்டு மகிழும் விழாவின் பெயர் என்ன? - கா _ _ _ _ _ ல் (7)
11. நமக்கு உணவு தரும் இயற்கை, சூரியன், விவசாயிகளின் தோழனான மாடுகளுக்கு நன்றி செலுத்தும் விதத்தில் படைக்கப்படும் உணவுப் பொருட்களுடன் இதுவும் இடம்பெறும். பாக்குடன் சேர்த்து வைக்கப்படும் இலை - வெ _ _ லை (4)
12. பயிர்கள் முதிர்ச்சியடைந்த பிறகு அவற்றை வயலில் இருந்து வெட்டி எடுக்கும் செயல் முறையைக் குறிக்கும் சொல் - அ _ _ டை (4)
13. விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவர் - வி _ _ யி (4)
14. பொங்கல் நாளில் பொங்கல் உடன் படைக்கப்படும் மஞ்சள் நிறக் காய். இதற்கு பரங்கிக்காய் என்று இன்னொரு பெயரும் உண்டு - பூ _ _ _ _ ய் (6)
15. முக்கனிகளில் ஒன்றான இந்தப் பழம் அனைத்துப் பூஜைகளிலும் இடம்பெறும் - வா _ _ _ _ ம் (6)

விடுகதைகள் விடைகள்....

1. கடிகாரம்
2. ஆறு, நதி
3. ஊசி
4. கையுறை
5. வரைபடம்
6. மேசை
7. எதிரொலி
8. மேகம்
9. முட்டை
10. தீ
11. நிலா
12. மழை
13. மேசை
14. காற்று
15. பந்து
16. சீப்பு
17. தலையணை
18. பலூன்
19. கண்
20. கண்ணாடி

சூ	டே	கா	ர	ண்	ச்	ம	ம	லா	ண்	மூ	ஈ	ஆ	ம்	ல்	அ	தி	பா	நா
ச்	டீ	கு	வி	ணெ	டு	உ	ஞ்	அ	நா	ச்	ர	ண்	போ	தே	ர்	ரு	வி	ரூ
டு	கா	ர	ண்	ஜி	கா	ற்	ச	ர்	ரூ	க	பி	நா	ச	ம	சே	வ	சூ	உ
கா	கே	ச	சே	ல்	ஜா	ஜ்	ள்	சே	உ	ரு	ற்	ரூ	ளா	பா	சா	ள்	ச்	டே
ஜா	ற்	ரூ	ளா	லி	செ	ஊ	கொ	ட்	டே	ம்	ஜ்	உ	பீ	யி	டே	ளு	டு	லா
செ	வெ	ல்	ல	ம்	ஜு	ஓ	த்	பை	கி	பு	ஊ	டே	ம்	கி	மே	வ	கா	அ
டீ	கு	வி	ணெ	ற்	ரூ	ளா	து	வூ	டூ	ச்	ஓ	ப	ண்	டி	கை	ர்	ஜா	ர்
ட	மி	வி	ம	ரு	ம்	சே	கீ	ம	க	ர	ச	ங்	க	ரா	ந்	தி	செ	சே
மூ	ஈ	ஆ	பா	ழ	பி	டீ	கு	வி	ணெ	மா	மே	சூ	பூ	ச	ணி	க்	கா	ய்
ன்	ஜீ	ச்	ப	ஹா	கூஷி	மூ	ஈ	ஆ	ம்	ல்	ட்	ச்	ஜ்	க்	லா	தெ	தீ	றோ
ஆ	ஈ	ப்	கா	ர	ண்	ன்	ஜீ	ச்	எ	ட்	ஓ	டு	ம்	ஓ	அ	ரூ	ண்	ஈ
ம்	ழை	நி	றோ	ட	ர	ண்	போ	தே	ந்	ழி	ட்	கா	ப்	இ	ர்	சா	நா	ம
வா	ர	ண்	போ	தே	வீ	லா	க	ற்	ர்	க	ர்	ஜா	ச்	பொ	சே	ல	ரூ	உ
சூ	மூ	ஈ	ஆ	ம்	சூ	அ	லா	பூ	க்	ர்	ஜூ	செ	அ	ப்	ங்	நு	உ	ற்
ச	டீ	கு	வி	ணெ	ச்	ர்	டொ	லி	சோ	மா	டெ	று	போ	ணோ	டூ	க	டே	ஜ்
டு	லா	டீ	கு	வி	டு	சே	ல்	கா	ர	ண்	வ	கா	ர	ண்	போ	தே	ல்	ஊ
கா	அ	மூ	ஈ	ஆ	கா	ஜ	கா	ர	ண்	டை	க்	பி	மூ	ஈ	ஆ	ம்	ல்	ஓ
ஜா	ர்	ன்	ஜீ	ச்	ஜா	டீ	கு	வி	ணெ	வெ	ற்	றி	லை	ஓ	மூ	ஈ	ஆ	ம்
செ	சே	மூ	ஈ	ஆ	செ	ர	ண்	போ	தே	ல்	க	ங்	பொ	ம்	னு	கா	கா	ர

பொங்கல் சிறப்பு வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்களேன்!

ஆக்கம்: செல்வி சாய் ஜனனி மணிவண்ணன்

விடை 28-ம் பக்கம் பார்க்கவும்

கவினும், அம்மாவும்: உணவே மருந்து

ஆக்கம்: செல்வன் கவின் விஸ்வசாரதி மற்றும் திருமதி கீதாதேவி சுந்தர்ராஜ்

கவின், காலை உணவு சாப்பிட்டாயா? என்று அம்மா கேட்கும் ஒவ்வொரு முறையும் கவின் சற்று அலட்சியமாகப் பதில் சொல்லுவான்.

ஆனால் அன்று அம்மா சொன்ன ஒரு விஷயம் கவினின் மனதில் ஆழமாகப் பதிந்தது.

"நம் உடல்நலம் நாம் கைகளில்தான் இருக்கிறது" என்று அம்மா கூறினார். அதற்குக் காரணம் நம் தினமும் உண்ணும் உணவு தான். சரியான நேரத்தில், சரியான அளவில், சத்தான உணவை உண்டால் பல நோய்களை எளிதாகத் தவிர்க்கலாம். அதனால் தான் நாம் முன்னோர்கள் "உணவே மருந்து" என்று கூறினார்கள்.

இயற்கை தரும் ஆரோக்கியம்

காய்கறிகள், பழங்கள், கீரைகள், தானியங்கள் போன்ற இயற்கையான உணவுகள் நமக்குச் சக்தி தருகின்றன. அவை நமது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகின்றன. மருந்துகள் நோய் வந்த பிறகு மட்டுமே உதவுகின்றன.

ஆனால் உணவு நோய் வருவதற்கு முன்னே நம்மைக் காக்கும் சிறந்த மருந்து ஆகும்.

கவினின் சுவாரஸ்யமான விடுகதை!

அ, ஆ வரிசையில் ....

மஞ்சள் நிற உடல்,

மேலே பச்சை கிரீடம்,

பார்த்தால் முட்கள்,

சுவைத்தால் இனிப்பு.

அது என்ன?

பதில்: அன்னாசிப் பழம்

ஒரு நாளுக்கு ஒன்று போதும்,

நலமாக இருக்க உதவும்,

பழங்களில் புகழ் பெற்றது,

நான் யார்?

பதில்: ஆப்பிள்

அன்று முதல் கவின் காலை உணவைத் தவற விடாமல் சாப்பிடத் தொடங்கினான். அம்மாவின் ஒரு சிறிய அறிவுரை, கவினின் வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

நல்ல உணவு = நல்ல உடல் = நல்ல வாழ்க்கை!

மொழியோடு விளையாடு

குறிப்புகளைப் படித்துச் சொல்லைக் கண்டறிக.

1. மூன்றெழுத்துச் சொல்.

- இறுதி எழுத்து, தமிழ் மாதங்களுள் ஒன்று.
- முதல் எழுத்தையும் இறுதி எழுத்தையும் சேர்த்தால் அது குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும்.
- இரண்டாம், மூன்றாம் எழுத்துகளைச் சேர்த்தால், செடி முளைப்பதற்கு அடிப்படை ஆகும்.
- முதல், இரண்டாம் எழுத்துகளைச் சேர்த்தால், பாடல் எழுதுபவரைக் குறிக்கும்.

அச்சொல் எது?

2. நாலெழுத்துச் சொல்

- ஐந்திணையுள் ஒன்று.
- முதல், இரண்டாம் எழுத்தைச் சேர்த்தால், வெண்ணெய்யிலிருந்து கிடைக்கும்.
- முதல் எழுத்தையும் இறுதி எழுத்தையும் சேர்த்தால், உணவுப் பயிரைக் குறிக்கும்.

அச்சொல் எது?

செல்வி இலக்கியா பாலமுருகன்

CHENNAI EXPRESS
RESTAURANT & CATERING
www.chennaiexpressva.com

இரு படங்களுக்கும் உள்ள ஆறு வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்களேன்!

ஆக்கம்: செல்வி கீர்த்தனா கணேஷ்

விடைகள் 23-ம் பக்கம் பார்க்க...

ஒரு சொல் - இரு பொருள்

மெய்	– உடம்பு, உண்மை
படி	– படிக்கட்டு, படித்தல்
அணி	– அணிதல், வரிசை
மதி	– பெண், நிலவு
அன்னம்	– சோறு, ஒரு வகைப் பறவை
அடி	– பாதம், அடித்தல்
ஆறு	– எண், நதி
உரை	– சொல், தேய்
மாலை	– பொழுது சாயும் நேரம், பூமாலை
ஈ	– கொடு, பூச்சி
ஆடு	– விலங்கு, ஆடுதல்
அரவம்	– ஒலி, பாம்பு
ஆடி	– தமிழ் மாதம், கண்ணாடி
ஞாயிறு	– கிழமை, சூரியன்
அரி	– திருமால், சிங்கம்

செல்வன் ஹனீஷ் தினேஷ் குமார்

Zillion Technologies

Thought beyond the DOT

CMMI Level 3 & ISO 9001:2008 Certified

GLOBAL EXPERIENCE IN TECHNOLOGY SERVICES AND CONSULTING...

helping our customers reach beyond what they think is possible.

Zillion Technologies' innovative products bridge the gap between business and technology:

core expertise

- IT Modernization
- Digital Transformation
- Enterprise Mobility
- Cloud Solutions
- Cyber Security
- AI / ML / DL // Analytics
- Testing / QA
- Healthcare Management
- Project Management
- IT Outsourcing
- Software Architecture
- System Engineering



Call 703.579.6891

or visit us at zilliontechnologies.com

20745 Williamsport Place | Ashburn, VA 20147
Email: anthony@zilliontechnologies.com

குழந்தைகளின் ஓவியங்கள்

இனயா நிசாமுதீன்



கபிலன் தினேஷ் குமார்

கவின் விஸ்வசாரதி

கார்த்திகேயன் சிங்காரம் கணேசன்

காவ்யா கார்த்திக்குமார்



கிரித்விக் அருள்

தக்ஷா கணேஷ்

சஹஸ்ராரா கமலா கணேசன்



நிக்ஷித் கணேசமூர்த்தி

நிரஞ்சன்ராம் அணுசோஜ்

நிறைமதி
ராஜேஷ்குமார்

ப்ரதிஷ்கா

மதிசரண்



மதிமுகில்



மோசிகா ராஜேஷ்குமார்

ரமீன் எஃசான்

ராம் பிரணவ் கணேஷ்

இலக்கியா பாலமுருகன்



விபுஸ்ரீயன் கார்த்திகேயன்

ஜெசிகா

ஹனீஷ் தினேஷ் குமார்

ஹாசினி விஸ்வசாரதி

சர்விக் குமார் பாபு

இரு படங்களுக்கும் உள்ள ஆறு வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்களேன்! விடைகள்

என் பொங்கல் பண்டிகை

-செல்வி ஆராதனா அருண்

கதிரவனுக்கும்,
கழனி உழவனுக்கும்,
கால்நடைகளுக்கும்
நன்றி கூறும் நாள்.

தரணி போற்றும் திருநாளாம்
தைத் திங்கள் முதல் நாளாம்
அறுவடைப் பெருநாளாம்
பொங்கலைப் போற்றுவோம்!

வீட்டு முற்றத்தில்
வித விதமாய் மாக்கோலமிட்டு
மாவிலைத் தோரணம் கட்டி, ஆடு
மாடுகளுடன் கொண்டாட ஆசை தான்...

ஆனால் இது
அமெரிக்கப் பொங்கல் ஆயிற்றே.
தரணி பள்ளி இருந்ததால்
அதிகாலையில் எழுந்து

பாட்டி அனுப்பிய
புதுப் பானைக்கு
மஞ்சள், குங்குமம் வைத்து, பாலும்
பச்சரியும் பயித்தம் பருப்பும் சேர்த்து

புத்தாடை அணிந்து
பொங்கி வரும் வேளையில்
“பொங்கலோ பொங்கல்”
என்று கூறி மகிழ்ந்து

பக்குவமாய் படையல் இட்டு
பகலவனுக்கும் நன்றி சொல்லி
நெய் மணக்கும்
பொங்கலைச் சாப்பிட்டு
பள்ளிக்குச் சென்றேன்

தென்றல் முல்லை —

படைப்புகளின் பயணம்!!

திருமதி பானு கணேஷ்

(ஆசிரியர்க் குழுவிலிருந்து)

தென்றல் முல்லை ஒரு சாதாரண இதழ் அல்ல. இது நம் குழந்தைகளின் சிந்தனை, கற்பனை மற்றும் படைப்பாற்றலின் பிரதிபலிப்பு. இந்த இதழில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள், கவிதைகள், கதைகள், ஓவியங்கள் அனைத்தும் நம் குழந்தைகளின் உள்ளத்திலிருந்து பிறந்த அழகான படைப்புகள். ஒரு குழந்தையின் படைப்பை வெளியிடுவது என்பது அவர்களின் முயற்சியை மதிப்பது, திறமையைப் பாராட்டுவது, மற்றும் அவர்களின் தன்னம்பிக்கையை உயர்த்துவது. இந்த இதழ் மூலம், “நான் எழுத முடியும்”, “நான் வரைய முடியும்”, “என் திறமை மதிக்கப்படுகிறது” என்ற எண்ணம் குழந்தைகளின் மனதில் வலுப்பெறும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் எல்லா இளம் எழுத்தாளர்களுக்கும், கலைஞர்களுக்கும் எங்கள் மனமார்ந்த பாராட்டுகளும் வாழ்த்துகளும். தென்றல் முல்லை நம் குழந்தைகளின் கனவுகளுக்கு ஒரு சிறிய மேடை. அந்த மேடை அவர்களை மேலும் உயரத்திற்கு அழைத்துச் செல்லட்டும். இந்தப் பங்கேற்பு ஒரே இதழோடு நிற்காமல், தொடர்ந்து பயணமாக மாற வேண்டும் என்பதே எங்கள் ஆசை. ஒரு இதழில் எழுதாத குழந்தை, அடுத்த இதழில் எழுதலாம். ஒருமுறை ஓவியம் அனுப்பியவர், அடுத்தமுறை கதை அல்லது கவிதையுடன் வரலாம். முயற்சி முக்கியம் — பூரணத்தன்மை அல்ல. ஒவ்வொரு பங்கேற்பும், ஒரு கற்றல் அனுபவம். பெற்றோர்களே, உங்கள் குழந்தைகளை ஊக்குவியுங்கள், அவர்கள் சிந்தனைகளுக்கு ஒரு சிறிய உந்துதலே போதும். குழந்தைகளே தயங்காதீர்கள் எழுதுங்கள், வரையுங்கள், உங்கள் எண்ணங்களை வெளிப்படுத்துங்கள். “தென்றல் முல்லை” உங்கள் திறமைகளை வளர்க்கும் ஒரு மேடை. அனைவரும் தொடர்ந்து பங்கேற்று இந்த இதழை நம் குழந்தைகளின் குரலாக உயர்த்துவோம். நன்றி!



Your neigborhood DMV2K Realtor in VA & MD

All my Commission is yours except 0.5% -1%

*Restrictions Apply

Umadevi Natarajan
Senthil Kumar
+1 703 932 5240
dmv2krealtor@gmail.com

IKON
Ikon Realty of Ashburn
(703) 723 3434
44355 Premier Plaza #110, Ashburn, VA 20147

* Buyer needs to pay additional $500 Broker Admin Fee per transaction

****

EQUAL HOUSING OPPORTUNITY

Licensed in VA, MD, PA, NJ, GA, TX, AZ, CO, MN

VM
VEMA Mortgage LLC

Call me Today for Special Rates on Purchase & Refinance!

Scan here to get daily updates on mortgage rates

SENTHIL KUMAR
NMLS # 2494030
C: +1 425 503 5147
SENTHILKUMAR@VEMAMORTGAGE.COM

VEMA MORTGAGE LLC
NMLS # 1019911

****

ACUPUNCTURE WELLNESS CENTER

Ashburn, VA

Umadevi Natarajan

Traditional Acutouch Therapist

+1 469 353 9425

anbuthirucoil@gmail.com

Board Certified Holistic Health Practitioner

Certificate Number: 271534401

வெளிச்சம்

அனைவருக்கும் வணக்கம்!

வெளிச்சம் என்ற தலைப்பில் இந்த இதழில் நாம் பார்க்கப் போகும் இசைக் கருவி பறை.

வாசிங்டன் வட்டாரப் பகுதியில் வாழும் சண்முகம் என்பவருடன் நடந்த நேர்காணலை இங்கே பார்க்கலாம்.

கேள்வி: உங்களைப் பற்றிய சிறிய அறிமுகம் தாருங்கள்.

பதில்: என் பேரு சண்முகம் லோகநாதன் குயவர். நான் 12 வருடமா வாஷிங்டன் வட்டாரப் பகுதியிலதான் வாழ்ந்துட்டு இருக்கேன். கடந்த 2018 ல இருந்துதான் இந்தப் பறை வாசிக்கிறதுல எனக்கு ஈடுபாடு வந்தது. அதுக்கப்புறம் நிகழ்ச்சிகள் நிறைய கலந்துகிட்டேன். 2018 ல நம்ம விஜயகுமார் ஐயா அவர்களுடைய நட்பு அமைந்தது. அதுல இருந்துதான் இந்தப் பறை பழக ஆரம்பிச்சேன். தற்சமயம் இந்த வாஷிங்டன் வட்டாரத்துல பாத்தீங்கன்னா நிறைய தமிழ்ப் பள்ளியில நம்மளோட ஈடுபாடு உண்டு. அப்புறம் மக்கள் சம்மந்தமான நிகழ்ச்சிகள் எல்லாம் ஏற்பாடு செய்யிறதுக்கு உதவி செஞ்சுகிட்டு இருக்கோம். அது இல்லாம, இங்க அக்கம் பக்கத்தில் இருக்கிற வட்டாரத் தமிழ்ச் சங்கங்களில் இருந்து வரும் நிகழ்ச்சி அழைப்புகள்தான். மற்றபடி என்னைப்பற்றி சொல்லணும்னா நான் ஒரு மென்பொருள் வடிவமைப்பாளர்.

திருமதி அபிநயா மோகன்குமார்

கேள்வி: பல இசைக் கருவிகள் இருக்க, நீங்கள் பறையைத் தேர்ந்து எடுக்கக் காரணம் என்ன?

பதில்: 2018 ல ஐயா திரு. விஜயகுமார் முத்துசாமி அவர்களோட தொடர்பு கிடைச்ச பிறகு மெல்ல பறையைப் பற்றித் தெரிய ஆரம்பித்தது. அதை நீங்க தொட்டு வாசிச்சுப் பாத்தீங்கனாலோ, இல்ல யாரோ ஒருத்தர் உங்களைச் சுத்தி வாசிக்கிறாங்கனாலோ, அதோட அதிர்வு உங்களை வந்து தாக்கக் கூடியது. அப்ப வாசிக்கும்போது நமக்கு இயற்கையாவே அதுல இருக்கிற சில மெட்டுகள்,

அதுல இருந்து வர ஒரு சில தாளங்கள் எல்லாம் பாத்தீங்கன்னா நமக்கு ரொம்பப் பரீட்சயமான தாளங்களா இருக்கும். அதை யாரும் சொல்லிக் கொடுத்து உங்களுக்கு வாசிக்கணும்னு அவசியம் கிடையாது. கைகளைக் கொடுத்தீங்கனாலே சும்மா மேசைகளைப் போட்டு தட்டுறது, நாற்காலியில தட்டுறது, இதேதான். இதையே நம்ம பறையில வாசிக்கும்போது அதோட தாளம் வந்து நமக்கு ரொம்பப் பிடிச்சமாதிரி இருந்தது. அதனாலதான் எனக்குப் பறையில ஒரு ஆர்வம். பறை பத்தின குறிப்பு வந்து புறநானூற்றுப் பாடலிலேயே வந்திருக்கு. இருக்கறதுலேயே நமக்குக் கிடைச்சிருக்கக் கூடிய தொன்மையான நூல் புறநானூறுதான். அதுலயே பறையைப் பத்தி மேற்கோள் காட்டிச் சொல்லி இருக்காங்கன்னா, இந்தத் தோல்க் கருவியானது பல காலகட்டங்களில் வாசிக்கப்பட்டு வருது. அப்போ இந்தப் பறைங்கிறது இன்னைக்கு நேத்துக்கு வந்தது கிடையாது. இது ரொம்ப நெடுங்காலமா தமிழர் பண்பாட்டுல தமிழரோட மரபில ஊறிப்போன ஒரு விஷயம். இந்தப் பறை என்னைப் பொருத்த வரைக்கும் தமிழ்ச் சமூகத்துடைய காலக் கருவிகளுள் தாய்க் கருவின்னு சொல்லலாம்.

கேள்வி: பறை வாசிக்கும்போது உங்களுக்கு மறக்க முடியாத அனுபவம் என்ன?

பதில்: 2018 இல் தீபாவளி நிகழ்ச்சிக்காக கேப்பிடல் ஒன் பேங்கில் நம்ம குழுவை அழைச்சிருந்தாங்க. அந்த நிகழ்ச்சியில் நாங்க எல்லாரும் குழுவாகப் போய் வாசிச்சோம். அதுக்கு கிடைச்ச வரவேற்பு நல்ல சிறப்பான வரவேற்பு. அங்க இருக்கிற வெள்ளையின மக்கள், கருப்பின மக்கள் யாருமே நிறப்பேதமின்றி அந்த இசைக்கு எல்லாருமே ஆட ஆரம்பிச்சாங்க. அது பெரும் வரவேற்பு பெற்ற நிகழ்ச்சி. அது எனக்கு ஒரு மறக்க முடியாத அனுபவம். 2018 இறுதியில பென்சில்வேனியால ஒரு நிகழ்ச்சிக்குப் போயிருந்தோம். பொதுமக்கள் இருக்கிற பகுதியில அந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தாங்க. நிறைய கலைகள் எல்லாம் அங்க வந்து அரங்கேற்றம் பண்ணாங்க. அப்போ அங்கையுமே வந்த பொதுமக்கள் கிட்ட இருந்து பறைக்கு ஒரு நல்ல வரவேற்பு வந்தது. அங்க நாங்க பண்ண நிகழ்ச்சி உள்ளூர் தொலைக்காட்சியில ஒலிபரப்பு செய்தாங்க. அதுவும் ஒரு நல்ல வரவேற்பு பெற்ற நிகழ்ச்சின்னு நான் நினைக்கிறேன்.

கேள்வி: பறையோட நம்ம பண்பாட்டு முக்கியத்துவம் பற்றி உங்களுக்குத் தெரிந்ததை எங்களுக்குச் சொல்ல முடியுமா?

பதில்: என்னைப் பொறுத்த வரையிலும் தமிழ் சமூகத்துடைய காலக் கருவிகளின் தாய்க் கருவின்னா, நான் இந்தப் பறைன்னு தான் சொல்லுவேன். அதாவது, அந்தக் காலத்துல வேற ஏதோ ஒரு பெயரால கூட இது அழைக்கப் பட்டிருக்கலாம், எனக்குத் தெரியல. ஆனா, இந்தப் பறையிலிருந்து வந்ததுதான் மத்த எல்லாக் காலக் கருவிகள் அப்படிங்கிறது என்னோட கருத்து. அதை நிரூபிக்கிற மாதிரி பல விஷயங்கள் இருக்கு. பாத்தீங்கன்னா, இப்பறை மாதிரியே இன்னொரு கருவி இருக்கு. அதுக்கு மகுடம்னு பேரு. அதுக்கு ஏன் மகுடம்னு பேர் வச்சாங்கன்னா, அது காலக் கருவிகளின் மகுடம். அதாவது, எல்லாக் காலக் கருவிகளுக்கும் அது ராஜாக் கருவி. இந்த மகுடத்துல வாசிக்கிற ஜதி ரொம்ப சிரமமான ஜதியெல்லாம் இல்லை. நீங்க அதுல சுலபமா வாசிக்கலாம். மத்த இசைக்கருவிகளில் வாசிக்கிற தாளத்தை சுலபமா நீங்க மகுடத்துல வாசிக்கலாம். தமிழ்நாட்டுல சில பகுதிகளில் இன்னும் இதை வாசிக்கிறாங்க. அதை வாசிக்கும் மக்கள் குறைஞ்சுகிட்டே வராங்க. ஆனா, இன்னும் ஒரு சில பகுதிகளில் அது வாசிக்கப்படுது.

கேள்வி: நீங்க இதைச் சொல்லும்போது எனக்கு ஒரு தனிப்பட்ட கேள்வி இருக்கு. இந்த இசைக் கருவிகளை எல்லாம் எப்படி வாங்குறீங்க? எங்க இருந்து வாங்குறீங்க?

பதில்: இந்தியால பல நண்பர்கள் இருக்காங்க. வேணுங்கிறத வாங்கிக் கொடுக்கிறதுக்கு நமக்கு தமிழ்நாட்டுல நண்பர்கள் இருக்காங்க. மதுரையில ஐயா வெங்கடாஜலபதின்னு ஒருத்தர் இருக்கார். அவர் கிட்ட நம்ம இந்த மாதிரி ஏதாவது உதவி வேணும்னு கேட்டா, அவர் அது எங்க இருக்கும் என்னனு விசாரிச்சு வாங்கிக் கொடுப்பார். அவர் ஒரு மக்கள் இசைக் கலைஞரா இருப்பதால, அவர் நட்பு வட்டாரத்தின் மூலம் எங்கெங்க என்ன கிடைக்கும்னு அவருக்குத் தெரியும்.

கேள்வி: நீங்க எந்த மாதிரி நிகழ்ச்சிகளில் எல்லாம் இந்தப் பறை வாசிப்பீங்க?

பதில்: பொதுவா நம்ம அமெரிக்கப் பகுதிகளில் பாத்திங்கன்னா, பொங்கல் விழா, சித்திரை விழா மற்றும் சில தமிழ்ச் சங்கங்கள் ஏதாவது நிகழ்ச்சிகள் ஒருங்கிணைச்சு இருந்தாங்கன்னா, அங்க வாசிப்போம். கோயில் நிகழ்ச்சிகளில் கூடப் பண்ணுவோம். இங்கு முருகன் கோயில் இருக்கு. அங்கு சூரசம்ஹாரம் மாதிரி எந்த நிகழ்ச்சி இருந்தாலும் நாங்க போய் வாசிப்போம்.

அதுவும் இல்லாம தமிழ்ப் பள்ளிகளில் ஆண்டு விழாக் கொண்டாட்டம், பொங்கல் விழாக் கொண்டாட்டம் போன்ற நிகழ்ச்சிகளுக்குப் போய் பிள்ளைகளுக்கும் பயிற்சி கொடுத்து அவர்களையும் வாசிக்க வைப்போம். அது இல்லாம நாங்களும் ஒரு குழுவாகப் போய் அவங்களுக்குப் பண்ணிக் கொடுத்திட்டு வரோம்.

கேள்வி: பறைக்கு என்று தனிப்பட்ட தாளங்கள் இருக்கா, இல்ல பொதுவா எப்படி நீங்க அதை வாசிக்கிறீங்க?

பதில்: பறையில நிறைய தாளங்கள் இருக்கு. தெம்மாங்குத் தாளம், சீமந்தத்துக்கு என்று தனியா ஒரு தாளம், குழந்தையைத் தொட்டிலில் போடுறதுக்கு ஒரு தாளம், மஞ்சள் நீராட்டு விழாவுக்கு ஒரு தாளம், திருமண சுபநிகழ்ச்சிகளுக்கு ஒரு தனி தாளம், கிராமத்துல நடக்கிற திருவிழாவுக்கு ஒரு தாளம், மரணத்துக்கு ஒரு தாளம் என ஒவ்வொண்ணுக்கும் ஒரு தாளம் இருக்கு.

கேள்வி: இந்தக் கலையைப் பாதுகாக்கவும் பரப்பவும் போதுமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறதா? உங்கள் பார்வையில் நீங்க என்ன சொல்றீங்க?

பதில்: ஆமா, அதாவது கடந்த ஐந்து ஆறு ஆண்டுகளில் எனக்குத் தெரிஞ்சு இதுக்கான முன்னெடுப்புகள் நிறைய நடக்குது. இன்னைக்கு அமெரிக்காவிலே நிறைய பறைக் குழுக்கள் இருக்கு. என்ன அதுல ஒரு வருத்தமுன்னா, நிறைய குழுக்கள் நிகழ்ச்சிக்கு மட்டுமே பண்றாங்க. அதுக்கப்புறம் அப்படியே விட்டுடறாங்க. நாங்க வந்து ஒரு எட்டு வருஷமா பண்ணிட்டு இருக்கோம். இதுல என்னன்னா, ஒரு கலையை நீங்க நல்லாப் பழகி, அதைக் கத்துக்கணும்னு நினைச்சா, முதல்ல வந்தவுடனே நம்மலாள பண்ணமுடியாது. பறை வாசிக்க முன்ன பின்ன பழகியிருக்க மாட்டோம், இங்க வந்துதான் கத்துக்குறோம். அப்போ அதுக்கான ஒரு நேரத்தை நம்ம கண்டிப்பா செலவு செய்யணும்.

கேள்வி: இப்போ இருக்கிற இந்தத் தலைமுறை மாணவர்கள் இதை எப்படிப் பாக்குறாங்க? இதைக் கத்துகிறதுக்கு ஆர்வமா இருக்காங்களா?

பதில்: நிறைய பெற்றோர்கள் அவங்க பிள்ளைகளை ஆர்வமா கொண்டு வந்து சேர்க்கிறாங்க. தமிழ்ச் சங்க நிகழ்ச்சிகளில் பறையை ஒரு செக்மெண்ட் ஆக வைக்கிறோம். அதனாலேயே நிறையபேர் ஆர்வமா வராங்க. அவங்க ஆர்வமா கூட்டிட்டு வரதே பெரிய விஷயம். அதுமட்டும் இல்லாம பறையை வச்சிக்கிட்டு அவங்க வீட்டுல பழகறது, அதுக்குத் தானியா நேரம் ஒதுக்குறதுன்னு இருந்தா இன்னும் நல்லா இருக்கும். இங்க பிறந்து வளர்ந்த பசங்களா இருந்தாக் கூட, சில பசங்க ரொம்பவே ஆர்வமா கத்துக்குறாங்க. மற்ற கருவிகள் எல்லாம் கீழ தரையில வச்சு வாசிக்கணும், பறையை அவங்க தூக்கிட்டு வாசிக்கணும். அதனால கொஞ்சம் சிரமப்படுறாங்க. அது தவிர்த்து பசங்க எல்லாம் நிகழ்ச்சியில பங்கேற்குறாங்க, விரும்பி வாசிக்கிறாங்க.

பறை பற்றிய நிறைய கருத்துகளை நமக்காக பகிர்ந்துகொண்ட திரு. சண்முகம் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

பொங்கல் விழா வாழ்த்துகள்

ஆண்டி சாவித்திரி கிரி
& ஜெகதா கிரி
ஓவியா கிரி,
அகிலன் கிரி, நேயா கிரி

SOFTSQUARE LLC, CHENNAI / USA

பொங்கல் சிறப்பு வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்களேன்!

விடைகள்



CYBERSECURITY

HEALTHCARE IT

CLOUD COMPUTING

BIG DATA

TRANSFORMING ORGANIZATIONS INTO
HIGH-PERFORMANCE BUSINESSES » IS OUR COMMITMENT.

BUSINESSINTEGRA

TOGETHER » IT IS DONE

BUILDING HIGH-PERFORMANCE BUSINESS

PRATHIBA RAMADOSS, PRESIDENT & CEO
SELVA JAYARAMAN, EVP & CTO

6550 Rock Spring Drive
Suite 450
Bethesda, MD 20817
Telephone: 301-474-9600
www.businessintegra.com

Inc. 500

CMMI LEVEL 3

Certified ISO 9001:2008

Information Security Management Certified ISO 27001:2013

Certified Service Management Systems ISO 20000:2011

திரை விமர்சனம்

பராசக்தி

மிகப் பிரபலமான ஒரு பழைய படத்தின் தலைப்பை தாங்கி புதிய தலைமுறை நடிகர்களை வைத்து எடுக்கப்பட்டிருக்கும் புதிய படம் பராசக்தி. 1960-களில் மதுரை, சிதம்பரம், பொள்ளாச்சி மற்றும் சென்னை ஆகிய இடங்களில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் , அவற்றை மாணவர்கள் ஒருங்கிணைத்து போராடிய விதம், அக்காலகட்டத்தின் அரசியல் நிலவரம்,மொழிப் போருக்கு எதிரான மாநில , மத்திய அரசின் அடக்கு முறைகள் , மொழிப் போராட்டத்திற்காக நடந்தேறிய தியாகங்கள் ஆகியவற்றை தொகுத்து கொஞ்சம் கற்பனையும் , உண்மையும் கலந்து படைக்கப்பட்ட திரைப்படம் இந்த பராசக்தி.

திருமதி மோனிகா ஜெரால்டு

புறநானூறு எனும் மாணவர்களின் புரட்சிப்படை தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்புக்கு எதிராகரயில்எரிப்புப்போராட்டத்தை நடத்துவதாகப் படம் துவங்குகிறது. காவல் துறை அதிகாரியான திருநாடன் ரயிலில் நாயகன் செழியனுடன் சண்டையிடும் காட்சிகளுடன் படம் ஆரம்பிக்கிறது. ஆனால், அந்தப் போராட்டத்தில் ஒரு மாணவர் உயிரிழந்ததும் இதற்கு மேல் இதெல்லாம் வேண்டாம் என செழியன் முடிவெடுத்து ரயிலில் கரி அள்ளி போடும் வேலை பார்த்து வருகிறார். ரயில் போராட்டத்தை விபத்து என்றே சொல்ல வேண்டும் என நேரு உத்தரவிட்டு மொழிப் பிரச்சனை வராமல் பாது காக்கப் படும் என்கிற உத்தரவையும் கொடுக்கிறார்.

ஆனால், அவரது மகள் இந்திரா காந்தி ஆட்சி காலத்தில் மீண்டும் தமிழ் நாட்டில் இந்தி திணிப்பு பிரச்சனை உருவாகிறது. காங்கிரஸ் கட்சியின் கடைசி முதல்வரான பக்தவச்சலம் அதற்கு ஆதரவாகச் செயல்பட மீண்டும் மாணவர் போராட்டம் வெடிக்கிறது. தனது துப்பாக்கி சுடும் விரலை உடைத்த செழியனை பழிவாங்க திருநாடன் பொள்ளாச்சி மக்களை கொடுமைப்படுத்திக் கொல்வது, மாணவர்கள் நடத்திய கையெழுத்து இயக்கத்தை முடக்க அவன் செய்யும் சதிகளை நாயகன் செழியன் முறியடித்தாரா? இல்லையா? இந்திரா காந்தி தனது அப்பாவின் வாக்குறுதியை மீண்டும் நிறைவேற்றினாரா? இல்லையா? என்பது தான் பராசக்தி படத்தின் கதை.

சிவகார்த்திகேயன் செழியனாக சிறப்பாகவே நடித்துள்ளார். தனது குதூகலமான நடிப்பால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கவர்ந்து விடுகிறார். அதே நேரத்தில் புறநானூறு படைத் தலைவனாக மாறும் இடங்களில் தமிழின் வீரத்தை மிகைப்படுத்தாமல் நடிப்பில் வெளிக்காட்டுகிறார். தெலுங்குப் பெண்ணாகவே ஸ்ரீலீலா வந்து சிவகார்த்திகேயனுக்கு இந்தி சொல்லிக் கொடுக்கும் இடங்களும் அவரது தம்பி அதர்வாவின் போராட்டங்களைப் பார்த்து சிவகார்த்திகேயனை கலாய்க்கும் இடங்களும், ஆல் இந்தியா ரேடியோவில்

வேலை பார்த்தாலும், மைக்கை பார்த்தால் பயத்தில் திக்கும் அவர் கிளைமேக்ஸில் நடித்துள்ள நடிப்பு நன்றாக உள்ளது. அதர்வா படத்தில் அழுத்தம் திருத்தமான ஒரு நடிப்பை எந்தவொரு மெனக்கெடலும் இல்லாமல் நடித்துள்ளார். அண்ணன் கட்டி அணைக்கும் இடத்தில் அவரும் குழந்தையாக மாறுவது எல்லாம் ரசிக்க வைக்கிறது. சிவாஜி நடித்த பராசக்தி படத்தை கல்லூரியில் இந்தி படத்தை மாற்றிவிட்டு போடும் இடத்திலேயே அவருக்கான தைரியம் வெளிப்படுகிறது.. அனைவரையும் விட படத்தில் முதல் காட்சியில் இருந்து இறுதிக் காட்சியில் பேசும் வசனம் வரை ரவி மோகன் தான் இந்தப் படத்தின் நாயகனாகவே தெரிகிறார். மனசாட்சி இல்லாத வில்லன் என்பதை வாயால் வடை சுடாமல் ஒரு கைக் குழந்தையை வைத்திருக்கும் பெண்ணையும் சுடும் காட்சியில் காட்டி மிரட்டி விடுகிறார். அம்மா இந்தி, அப்பா தமிழ் என்கிற குடும்பப் பின்புலமாக இருந்தாலும், படத்தில் நாயகன் சிவகார்த்திகேயனை விட அவரது தமிழ் உச்சரிப்பு தான் நன்றாக உள்ளது. ஜி.வி. பிரகாஷ் தனது 100வது படம் என்பதைத் தாண்டி தமிழ் மொழிக்கான படம் என்பதால் தனது ஒட்டுமொத்த மூளையையும் கசக்கிப் பின்னணி இசை மற்றும் பாடல்கள் என அனைத்தை யுமே படத்திற்குப் பெரிய பலமாக மாற்றிக் கொடுத்துள்ளார். அரசியல் தலைவர்களை தவறாக சித்தரித்து விடக் கூடாது என்பதில் சுதா கொங்கரா தனது புத்திசாலித னத்தை பயன்படுத்திய விதமும் சிறப்பு தான். எந்தவொரு மொழிக்கும் நாங்கள் எதிரி கிடையாது. மொழித் திணிப்பை மட்டுமே எதிர்க்கி றோம் என்பதை படத்தின் ஆரம்பத்திலேயே பதிய வைத்தது அருமை.

இந்தியாவில் உள்ள அனைத்து மொழிகளும் முக்கியம் என்பதையும் அனைவரும் வேற்றுமையில் ஒற்றுமையாக உள்ளார்கள் என்பதையும் அழுத்தம் திருத்தமாகப் பதிய வைத்துள்ளார் இயக்குனர் . கண்டிப்பாக இந்தப் பராசக்தி படத்தை குடும்பத்துடன் பார்க்கலாம். 20 மற்றும் 30களில் இருக்கும் இளைய தலைமுறையினர் இந்தத் திரைப் படத்தை ஒரு முறையாவது பார்த்து கொஞ்சம் நம் இந்திய அரசியல் அறிவைத் தெரிந்து கொள்ளலாம்.

பொங்கல் விழா
வாழ்த்துகள்

Protax & Accounting Services

701, Jackson Road, Silver Spring, MD 20904

Online Tax Consultation and Preparation services are available.

Individual • BUSINESS
Non-profit Organization

Please call me at (301) 573 8574 or send an email to peter.yeronimuse@gmail.com

Peter Yeronimuse M.com., EA., CFE.,
Enrolled Agent with Internal Revenue Service & Certified Fraud Examiner

சிறுகதை

வரம்

பாகம் 2:
குந்தவையும் குட்டிச் சாத்தானும்

அத்தியாயம் 1: நீங்க வனிதாவா... புனிதாவா?

ஊரைவிட்டு வேறு ஊர் சென்று வாழ்வது பெற்றோர்களுக்கு மட்டுமல்ல, குழந்தைகளுக்கும் கடினமான ஒன்று. அதனால் குந்தவை மிகவும் வருத்தத்துடனும், கோபமுடனும் தன் அப்பா கந்தனுடனும், அம்மா குமுதாவிடமும் சண்டை போட்டுக் கொண்டிருந்தாள்.

“சாரிடா தங்கம், நம்ம அம்மாவுக்கு அங்கதான் வேலை கிடைச்சிருக்கு, வேற வழியில்லை. எங்களுக்கும் இந்த ஊரையும் எல்லா நண்பர்களையும் விட்டுப்போக மனசு இல்லை, ஆனா வேற வழியில்லை” என்று சமாதானம் செய்தனர்.

இரவு சுமார் பதினொன்று மணியிருக்கும், அவர்கள் புது வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். அதுவரை குந்தவை அவர்களிடம் எதுவும் பேசவில்லை.

குந்தவையும் அருகில் உள்ள பள்ளியில் சேர்ந்தாள். நாட்கள் செல்லச் செல்ல, அவளது கோபம் குறைந்தது; ஆனால் தோழர்கள் கிடைக்கவில்லை என்ற வருத்தம் இருந்தது.

கந்தனுக்கும் குமுதாவுக்கும் ஒரே மகள் குந்தவை, அவள்தான் அவர்களின் உலகம். அவர்கள் இந்த ஊருக்கு வந்ததே, குந்தவையை நல்ல பள்ளியில் சேர்க்க வேண்டும் மற்றும் அவளுக்கு இந்த ஊரில் நல்ல எதிர்காலம் இருக்கும் என்றுதான்.

குந்தவைக்கும் அது தெரியும். ஆகவே, தனக்குத் தோழர்கள் கிடைக்கவில்லை என்று தெரிந்தால் தன் பெற்றோர்கள் மிகவும் வருத்தப்படுவார்கள் என்று எண்ணி, அதை அவர்களிடம் சொல்லவில்லை. அந்த வருத்தத்தைத் தனக்குள்ளேயே வைத்துக்கொண்டு, பெற்றோர்களிடம் மகிழ்ச்சியாக இருப்பதைப் போல் நடித்துக் கொண்டிருந்தாள். பேருந்தில் யாரும் அவளிடம் பேசமாட்டார்கள், பள்ளியிலும் தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டாள். மதிய உணவு இடைவேளையின் போதும் அவள் பக்கத்தில் யாரும் வந்து அமரமாட்டார்கள்.

இவர்கள் குடிவந்த அதே தெருவில் தான் முருகன் தன் மனைவி சுதாவுடன் பல மாதங்களாக வாழ்ந்து வந்தான். அவர்கள் இருவரும் அக்கம் பக்கத்து வீட்டினர் என்பது அப்போது அவர்களுக்குத் தெரியாது

முருகனுக்கு அவன் மனைவி சுதா போன் பண்ணி, “வீட்டுக்கு சீக்கிரமா வாங்க, நம்ம வீட்டுல திடீர்னு டிவி. ஆன் ஆகுதுங்க. ஸ்டவ்வை நான் ஆஃப் பண்ணிவிட்டு வந்தாலும் கேஸ் வாசம் வருதுங்க. எனக்கு ரொம்ப பயமா இருக்குங்க, சீக்கிரம் வாங்க” என்றாள்.

முருகன் அதற்குச் சுதாவிடம், “நான் வந்துட்டுதான் இருக்கேன். நான் வரும் வரை நீ வனிதா வீட்டுக்குப் போ. நான் நம்ம வீட்டுக்கு வந்தவுடன் நீ வா” என்றான். அரை மணி நேரத்தில் முருகன் வீட்டிற்கு வந்தான். வீட்டில் டிவி. ஓடிக்கொண்டிருக்கும் சத்தம் கேட்டது. “என்னம்மா சுதா, இப்போ பயமில்லையா? நாடகம் பார்த்தால் உனக்கு இந்த உலகத்தில் என்ன நடக்குதுன்னே தெரியாது” என்று கிண்டல் செய்தான். அதற்குச் சுதா, “நீங்க வந்துட்டீங்களா? போய் டிரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வாங்க, நான் உங்களுக்கு டீ போட்டு வைக்கிறேன்” என்றாள்.

முருகன் உடை மாற்றிவிட்டு வருவதற்கும், சுதா டீ போட்டு எடுத்து வருவதற்கும் நேரம் சரியாக இருந்தது. டீயைக் குடுத்துக்கொண்டே, "அடேங்கப்பா! இன்னைக்குத்தான் சுதா, நான் கேட்ட உடனே நீ டீ கொண்டு வந்திருக்காய். இன்னைக்கு மழைதான் வரப்போகுது" என்று கிண்டல் செய்தான் முருகன். "ஓவரா பேசாதீங்க, அப்படின்னா இன்னைக்கு உங்களுக்கு நைட்டு சாப்பாடு இல்லை" என்றாள் சுதா.

அப்பொழுது காலிங் பெல் அடித்தது. "இப்போ யாருடா நம்ம வீட்டுக்கு வர்றது?" என்றான் முருகன். "வேற யாரு, சுதாதான் காலிங் பெல் அடிக்கிறாள், நீங்க போய் கதவைத் திறங்க" என்றாள் அங்கிருந்த சுதா. "அது சுதானா, அப்போ நீ யாரு?" என்றான் முருகன். "நான் உங்களைப் பிடித்த குட்டிச் சாத்தான், என் பெயர் சதா" என்றாள் அந்த சுதா. முருகன் 'பகீர்' என்று சிரித்துக்கொண்டே (அல்லது திடுக்கிட்டு) கதவைத் திறந்தான்.

அவன் கண்களை அவனால் நம்ப முடியவில்லை. அங்கே நின்றது நிஜமான சுதாவும் வனிதாவும்!

"என்னங்க, என்னை வனிதா அக்கா வீட்டுல இருக்கச் சொல்லிட்டு நீங்க பாட்டுக்கு நம்ம வீட்டுக்கு வந்துட்டீங்க? வனிதா அக்காதான் நம்ம காரைப் பார்த்துட்டு, முருகன் வந்துட்டாரு போல இருக்கு, வா போய்ப் பார்க்கலாம்னு சொன்னாங்க" என்றாள் சுதா.

"நீ சுதான்னா... உள்ளே என்கூடப் பேசிக்கிட்டு இருந்தது யாரு? எனக்கு டீ போட்டுக்கொடுத்தது யாரு?" என்று ஆச்சரியத்துடனும் பயத்துடனும் வெளியே ஓடினான் முருகன். அவன் பின்னால் சுதாவும் வனிதாவும் ஓடினார்கள்.

முருகன் பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்தான். "வீட்டிற்குள் வரவே மாட்டேன்" என்றான். "என்னங்க, பேயைப் பார்த்துப் பயந்துட்டீங்களா?" என்றாள் சுதா. "அது பேய் இல்லம்மா, அது குட்டிச் சாத்தான் சதாமா!" என்றான் முருகன்.

மூவரும் வனிதாவின் வீட்டிற்குச் சென்றார்கள். வனிதாவின் கணவர் ஆல்பர்ட், முருகனிடம் "நீ பயமோ கவலையோ படாதே, நாளைக் காலை ஒரு மந்திரவாதியை அழைத்து வந்து அந்தப் பேயை ஓட்டிவிடலாம்" என்றான். அதற்கு முருகன் நடுங்கிக் கொண்டே, "அது பேய் இல்லைடா ஆல்பர்ட், அது குட்டிச் சாத்தான்!" என்றான்.

"அண்ணா, நாம ஏன் இவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லக்கூடாது? மருந்து சாப்பிட்டால் அவருக்கு நடுக்கம் குறையலாம் அல்லவா?" என்றாள் சுதா. "அந்தக் குட்டிச் சாத்தானை நம்ம வீட்டை விட்டுத் துரத்தினால் மட்டும்தான் என்னால் நிம்மதியாக இருக்க முடியும். அப்போதுதான் இந்த நடுக்கமும் என்னை விட்டுப் போகும்" என்றான் முருகன்.

"என்னடா நண்பா, நீ நம்ம குரூப்லயே பெரிய வீரன் என்று நினைச்சேன். ஆனா நீ இவ்வளவு பெரிய டூப்புன்னு இப்பதான் தெரியுது" என்று முருகனை நக்கல் செய்தான் ஆல்பர்ட். அதைக் கேட்டு வனிதாவும் சுதாவும் குபீரென்று சிரித்தார்கள். முருகன் அதற்கு, "நீ பேசுவடா... ஏன்னா அந்தக் குட்டிச் சாத்தான் உன் வீட்டில் இல்லை, நீ அதை பார்க்கவும் இல்லை. என்னைப் போல் நீயும் அதைப் பார்த்திருந்தால்தான் தெரியும், நீ எப்படிப்பட்ட வீரன்னு!" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டான்.

"நான் ஒரு மந்திரவாதிக்கு போன் செய்து நடந்ததைச் சொன்னேன். அவர் நாளை இரவு வருவதாகச் சொல்லியிருக்கிறார்" என்றான் ஆல்பர்ட். பிறகு அனைவரும் சாப்பிட்டுவிட்டுத் தூங்கச் சென்றார்கள். முருகன் தன் அறையில், "சுதா, லைட்டை ஆஃப் செய்ய வேண்டாம். இரவு முழுவதும் எரியட்டும்" என்றான்.

ஆல்பர்ட் தன் அறைக்குச் சென்றான். பிறகு வனிதாவும் வந்தாள். "முருகனைப் பார்க்கப் பாவமா இருந்தாலும் செம காமெடியா இருக்குது" என்று சொல்லிச் சிரித்தான் ஆல்பர்ட். "டேய் ஆல்பர்ட், சும்மா இருடா! அவங்களுக்குக் கேட்கப் போகுது" என்றாள் வனிதா.

"அந்தக் குட்டிச் சாத்தானுக்கு ரொம்ப குசும்பு பார்த்தியா? அதன் பேரு சதாவாம். என் கையில் மட்டும் மாட்டுச்சு, அதைச் சட்னியாக்கி நீ செய்யும் இட்லிக்குத் தொட்டுச் சாப்பிடுவேன்" என்றான் ஆல்பர்ட். "விடுடா அந்தக் கதையை, ரொம்ப நேரமாச்சு தூங்கலாம்" என்றாள் வனிதா. "என்னடி, உனக்கும் பயமா?" என்று கேட்டான் ஆல்பர்ட்.

வனிதா எதுவும் பேசவில்லை. ஆல்பர்ட் 'மன்மத ராசா' பாடலைப் பாடிக்கொண்டே பாத்ரூம் சென்றுவிட்டு வந்து படுத்தான். "அடியே வனிதா, எனக்கு ஒரு டவுட். ஒருவேளை அந்தக் குட்டிச் சாத்தான் நம்ம வீட்டுக்கு வந்திருந்தா, அதோட பேரு அனிதாவா இருக்குமா இல்ல கனிதாவா இருக்குமா?" என்று கேட்டான்.

அதற்கு வனிதா, "என் பேரு புனிதாவா இருக்கும்டா என் மன்மத ராசா" என்று சொல்ல, அவளது தலை மட்டும் 360 டிகிரி திரும்பியது. உடல் அப்படியே இருந்தது!

ஆல்பர்ட் பயத்தில் அலறியடித்துக் கத்த முயற்சி செய்தான். ஆனால் மூச்சுதான்

திரு. கார்த்திக் செல்லமுத்து

வந்ததே தவிர, சத்தம் வரவில்லை. அப்படியே மயங்கிக் கட்டிலிலிருந்து கீழே விழுந்தான். பயத்தில் சிறுநீரும் போய்விட்டது. பக்கத்தில் இருந்த தண்ணீரை எடுத்து அவன் முகத்தில் தெளித்தாள் புனிதா. (சாரி, தெளித்தது அந்த 'புனிதா' என்கிற குட்டிச் சாத்தான்!)

ஆல்பர்ட்டிற்கு நினைவு திரும்பியது. "நான் எங்கே இருக்கேன்?" என்றான். "நீ என் அழகுல மயங்கி எங்க விழுந்தியோ, அதே இடத்துலதான்டா இருக்க" என்றது புனிதா. அதைப் பார்த்துப் பயந்து மீண்டும் மயங்கினான் ஆல்பர்ட்.

"நாம என்ன அவ்வளவு அழகாகவா இருக்கோம்? இவன் நம்ம அழகைப் பார்த்து மயங்கி மயங்கி விழுறான்" என்று சொல்லி மீண்டும் தண்ணீரை முகத்தில் தெளித்தது புனிதா. "டேய் காமெடி பீஸ், தண்ணி தீர்ந்துடுச்சு. இனி மயக்கம் வருதுன்னா முதல்ல போய் தண்ணி எடுத்துட்டு வாடா!" என்றது அந்த சாத்தான்.

"டேய்... என்னென்ன பேசின அப்போ? இப்ப பேசுடா!" என்றது புனிதா. "இந்த ஸ்கெட்ச் உன் நண்பன் முருகனுக்குப் போட்டது இல்லடா, இது உனக்குப் போட்டது! என்ன சொன்ன? நான் உன் கையில கிடைச்சா சட்னி பண்ணுவியோ? வாங்க சார், வந்து சட்னி பண்ணுங்க" என்றது.

ஆல்பர்ட்டிற்கு இன்னும் பேச்சு வரவில்லை. அவன் சொல்ல நினைப்பது இதுவாகத்தான் இருக்கும்: "அக்கா... அக்கா... இதெல்லாம் வெறும் பில்டப் தான் அக்கா. உள்ள ஒண்ணுமே இல்லைங்க அக்கா! நான் பாட்டுக்கு என் வேலையைப் பார்த்துட்டுப் போற ஆளுங்க அக்கா. சும்மா ஒரு கெத்துக்காக அப்படிப் பேசினேன்."

"டேய் காமெடி பீஸ், நான் ஒரு பாட்டுப் போடுறேன், நீ ஒரு ஆட்டம் போடு" என்று சொல்லி அவன் மொபைலில் "மாமா... மலையூரு நாட்டாமை..." பாடலைப் போட்டது. ஆல்பர்ட் குந்த வைத்து உட்கார்ந்து கொண்டே நடுங்கினான். அது அந்த மெட்டுக்கு ஆடுவது போலவே இருந்தது. "டேய் எழுந்து நின்னு ஆடுடா!" என்றது புனிதா.

வனிதா தன் மகன் சார்லஸை அவன் அறையில் தூங்க வைக்கும்போது அங்கேயே தூங்கிவிட்டாள். பாட்டின் சத்தத்தால் முழித்தாள். "இந்த மனுஷனுக்கு அறிவே இல்லை. நட்ட நடு ராத்திரியில இப்படியா பாட்டு கேட்பாங்க? அதுவும் வீட்ல பிரண்ட்ஸ் இருக்கும்போது இவ்வளவு சத்தமா? இவனை வச்சுக்கிட்டு என்ன பண்றது?" என்று திட்டிக்கொண்டே அறைக்குள் சென்றாள்.

அங்கே ஆல்பர்ட் இடுப்பில் வேட்டி இல்லாமல் நனைந்த நிலையில் ஆடுவதைக் கண்டு அலறினாள். அதைப் பார்த்து ஆல்பர்ட் மீண்டும் மயங்கி விழுந்தான். சத்தம் கேட்டு முருகனும் சுதாவும் ஓடி வந்தார்கள். சுதா தண்ணீர் எடுத்து வர, முருகன் அதை வாங்கி ஆல்பர்ட் முகத்தில் தெளித்தான். ஆல்பர்ட் முதலில் வனிதாவைப் பார்த்து, "நீ... இல்ல நீங்க வனிதாவா இல்ல புனிதாவா?" என்று கேட்டான்.

வனிதா கோபத்தின் உச்சிக்கே சென்றாள். "இந்த மனுஷன் கனவு கண்டது மட்டுமில்லாம, ஊரைக் கூப்பிட்டு நம்ம குடும்ப மானத்தையும் வாங்கிட்டு, இப்போ என்னைப் பார்த்து வனிதாவா புனிதாவானு கேட்குறாரே!" என்று நினைத்தாள்.

முருகன் கைத்தாங்கலாக ஆல்பர்ட்டை வெளியே அழைத்து வந்து சோபாவில் உட்கார வைத்தான். தண்ணீர் குடிக்கச் சொல்லிவிட்டு என்ன நடந்தது என்று கேட்டான். ஆல்பர்ட் நடந்ததை எல்லாம் சொல்ல, "அந்த மந்திரவாதிக்கு எவ்வளவு பணம் கொடுத்தாலும் பரவாயில்லை, இப்போதே வரச் சொல்ல வேண்டும்" என்றான்.

பிறகு பாத்ரூம் செல்ல வேண்டும் என்ற ஆல்பர்ட், "நான் தனியாகப் போக மாட்டேன், நீயும் வாடி வனிதா" என்றான். பிறகு பயத்தில், "இல்லை வனிதா வேண்டாம், முருகா நீ வாடா" என்றான். ஒரு வழியாக ஆல்பர்ட்டைச் சமாதானம் செய்து வனிதா அழைத்துச் சென்றாள். ஆனால், கதவு மட்டும் திறந்து வைக்கப்பட்டிருந்தது!

மந்திரவாதி வரும் வரை அனைவரும் காத்திருந்தனர். அப்போது முருகன் சொன்னான்: "இந்த உலகத்திலேயே இதுதான் முதல் தடவை! ஒரு குட்டிச் சாத்தான் தண்ணீர் தெளித்து ஒருவனை இரண்டு முறை 'கலாய்க்கவே' எழுப்பி விட்டிருக்கு!"

இதைக் கேட்டு வனிதா, சுதா, மற்றும் அங்கிருந்த குட்டிச் சாத்தான்கள் சதாவோ புனிதாவோ அனைவரும் (கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும்) குபீரென்று சிரித்தார்கள்! அந்தச் சிரிப்புச் சத்தம் நள்ளிரவில் எதிரொலித்து, பக்கத்து வீட்டில் இருந்த கந்தனுக்கும் குமுதாவிற்கும் கேட்டது.

"யாருடா நள்ளிரவில் இப்படிச் சிரிக்கிறது?" என்று கேட்டுக்கொண்டே அவர்கள் திடுக்கிட்டு எழுந்தார்கள். கூடவே குந்தவையும் பயந்து எழுந்து, தன் பெற்றோர்கள் இருக்கும் அறைக்கு ஓடிச் சென்றாள்.

அனைவரும் வெளியே சென்று பார்க்க, அக்கம் பக்கத்தில் இருந்த மற்ற குடும்பத்தினரும் சத்தம் கேட்டு வெளியே வந்தார்கள்.

ஒருபுறம் பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்த ஆல்பர்ட்டும் முருகனும், மறுபுறம் விவரம் புரியாமல் முழித்துக் கொண்டிருந்த அக்கம் பக்கத்தினர் என அந்தத் தெருவே கலகலப்பானது.

ஊரை விட்டு வந்த சோகத்தில் இருந்த குந்தவைக்கு, இந்தச் சம்பவம் ஒரு விசித்திரமான ஆறுதலைத் தந்தது. கண்ணுக்குத் தெரியாத அந்தச் சாத்தான் தான் தன் தோழியாக இருக்கப் போகிறது என்று அப்போது அவளுக்கு தெரியாது.

இந்தப் புதிய ஊர் அவளுக்கு இனிமையான ஒன்றாக மாறப்போகிறது என்பதை அவள் உணர்ந்தாள். அனைவரும் ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசத் தொடங்க, அந்த நள்ளிரவுப் பொழுது ஒரு புதிய நட்பின் தொடக்கமாக அமைந்தது.

சுபம்.

பிரடெரிக் தமிழ்ப்பள்ளியின் உலக சாதனையின் பாதையில் சில பக்கங்கள் 2025: ஒரு பெற்றோரின் பார்வையில்...

தொகுப்பு: திருமதி கீதாதேவி சுந்தர்ராஜ்

"காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" - ஒரு வாய்ப்பு சரியான நேரத்தில் கிடைக்கும்போது, அதைச் செயல்பாடாக மாற்றினால்தான் சாதனை உருவாகிறது.

ஒரு தாயாக, அந்த உண்மையை நான் என் கண்முன்னே அனுபவித்த தருணம்—2022-ஆம் ஆண்டு நவம்பர் மாதம். அது என் குழந்தையின் வாழ்க்கையில் மட்டும் அல்ல, பிரெடரிக் தமிழ்ப் பள்ளியின் பயணத்திலும் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

ஒரு மின்னஞ்சல்... ஒரு கனவின் தொடக்கம்

நவம்பர் 12, 2022.

அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம் (ATA) மூலம் வந்த ஒரு மின்னஞ்சல், பிரெடரிக் தமிழ்ப் பள்ளியையும், என் மகள் ஹாசினி விஸ்வசாரதியையும், கின்னஸ் உலக சாதனைப் பாதையில் நிறுத்திய முதல் படிக்கட்டு என்று உறுதியாகச் சொல்ல முடிகிறது.

அந்த மின்னஞ்சல் வழியாகத்தான், "தமிழீழுதபடி" என்ற புதுமையான செயலியைப் பற்றி அறிந்துகொண்டோம். ஒரு பள்ளியின் முயற்சி, ஒருநாள் உலக சாதனையாக மாறப்போகிறது என்பதை அப்போது நாங்கள் யாரும் உணரவில்லை.

"தமிழீழுதபடி" ஒரு செயலியைத் தாண்டிய இயக்கம் அட்லான்டாவில் உள்ள கம்மிங் தமிழ்ப் பள்ளியின் முயற்சியாக, 2020-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட "தமிழீழுதபடி" செயலி, குழந்தைகளுக்கான ஒரு புதிய வாயிலாக அமைந்தது. அதன் நோக்கங்கள் மிகத் தெளிவானவை:

- தமிழ்ப் புத்தகங்களை எளிதாக உருவாக்குதல்
- அவற்றை முழுமையாக இலவசமாக வெளியிடுதல்
- உலகம் முழுவதும் அனைவரும் அணுகும் வகையில் பகிர்தல்

இந்த அழைப்பிதழ், பல தமிழ்ப் பள்ளிகளுக்கும் மாணவர்களுக்கும் தமிழ் புத்தகம் எழுதும் வாய்ப்பை திறந்தது.

ஒரு தாயாக எனக்கு மிகவும் பிடித்த அம்சம்— "தமிழை வகுப்பறையில் மட்டும் வைத்திருக்காமல், குழந்தைகளின் குரலால் உலக மேடைக்கு கொண்டு செல்வது."

ஹாசினி போன்ற குழந்தைகள், தங்கள் கற்பனை, அறிவு, மொழித் திறன் ஆகியவற்றை ஒன்றிணைத்து "நானும் ஒரு எழுத்தாளர்" என்று நம்பத் தொடங்கிய தருணம்,

ஒரு தாயின் மனதில் சொல்ல முடியாத பெருமையை உருவாக்கியது.

ஆறு வாரங்கள்... ... ஒரு தாய் மகளின் பயணம்

நவம்பர் 22, 2022 கம்மிங் தமிழ்ப் பள்ளியின் முதல்வருடன் நடைபெற்ற Zoom கலந்துரையாடல்கள், இந்த முயற்சிக்கு ஒரு தெளிவான செயல் திட்டத்தை வழங்கின.

- ஆறு வாரங்களில் குழந்தைகள் புத்தகங்களை எழுதி முடிக்க வேண்டும்
- அந்தப் புத்தகங்கள் வெளியிடப்படும்
- மேலும், அவை உலக சாதனை கணக்கீட்டில் சேர்க்கப்படும்

ஒரு தாயாக, அந்த ஆறு வாரங்கள் எனக்கு ஒரு சோதனை காலம். பள்ளி, வீட்டுப்பாடம், புத்தகம் எழுதுதல், திருத்தம், பயிற்சி. ஆனால் ஒரே விஷயம் தெளிவாக இருந்தது: என் குழந்தை ஒரு வரலாற்றின் பகுதியாக மாறிக்கொண்டிருக்கிறாள்.

ஹாசினியும் அவரது நண்பர்களும் உருவாக்கிய புத்தகங்கள்:

- டாக்டர் APJ அப்துல் கலாம்
- தோசை அம்மா
- தோசையும் தமிழ் நாடும்
- மொழியின் முதல் எழுத்துக்கள்
- மலர்கள்
- வாகனங்கள்

இந்தப் புத்தகங்கள் ஒவ்வொன்றும், ஒரு குழந்தையின் படைப்பு மட்டும் அல்ல கின்னஸ் உலக சாதனையில் சேர்க்கப்பட்ட ஒரு அத்தியாயம்.

டிசம்பர் 7, 2024 மறக்க முடியாத நாள்

டிசம்பர் 7, 2024. அட்லான்டாவில், Guinness World Records நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ பிரதிநிதிகள் முன்னிலையில், தமிழ் வரலாற்றில் ஒரு புதிய சாதனை உருவான நாள். "Most authors reading continuously from their own books"

(தங்கள் சொந்த புத்தகங்களில் இருந்து தொடர்ந்து வாசித்த அதிகபட்ச எழுத்தாளர்கள்) என்ற புதிய கின்னஸ் உலக சாதனை, தமிழீழுதபடி அமைப்பின் ஒருங்கிணைப்பில், தென்கிழக்கு பிராந்தியத்தில் உள்ள நான்கு தமிழ்ப் பள்ளிகள் இணைந்து உருவாக்கிய பெருமை:

- கம்மிங் தமிழ்ப்பள்ளி
- பிரெடரிக் தமிழ்ப்பள்ளி
- பீச்ட்ரீ தமிழ்ப்பள்ளி
- JTM தமிழ்ப்பள்ளி

காலை 8:47-க்கு வாசிப்பு தொடங்கியது. 10 மணிநேரங்கள் கடந்து,

மாலை நேரத்தில் Guinness World Records நிறுவனத்தின் "Officially Amazing" என்ற அறிவிப்பைக் கேட்டபோது, ஒரு தாயாக என் கண்களில் வந்த கண்ணீர்

அது மகிழ்ச்சியின் கண்ணீர்.

சாதனையைத் தாண்டிய பெருமை

இந்த சாதனை, ஒரு எண்ணிக்கையின் பெருமை அல்ல.

இது— பிரெடரிக் தமிழ்ப் பள்ளியின் தொலைநோக்கு, ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, குழந்தைகளின் உழைப்பு, பெற்றோரின் நம்பிக்கை

அனைத்தும் ஒன்றிணைந்தபோது உருவான வரலாறு.

ஒரு தாயாக நான் பெருமையுடன் சொல்கிறேன்— என் மகள் ஹாசினி, பிரெடரிக் தமிழ் பள்ளியின் ஒரு மாணவியாக,

தமிழை உலக சாதனை மேடையில் அமர வைத்த வரலாற்றின் ஒரு பகுதி. இந்தச் சாதனை, தமிழ் மொழி, குழந்தைகள், தொழில்நுட்பம், கல்வி ஒன்றிணையும் போது உருவாகும் உலகளாவிய தாக்கத்தின் உயிர்ப்பான சாட்சி.

பெண்மை... பெருமை....

பெண் மனதை பெண்ணால் மட்டுமே முழுமையாக அறிந்து, அவர்களின் உணர்வுகளை எழுத்துகளின் வாயிலாக வெளிப்படுத்த முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டவர் பெண் இலக்கியவாதி மாலதி மைத்ரி, பெண்ணிய உரிமையைப் பெற்றுத் தரும் அடையாளம் என்று இவரைக் கூறினால் அது மிகையாகாது. பெண்ணியம் சார்ந்த கவிதைகள் எழுதுவதில் வல்லவர். விளிம்பு நிலை அரசியல், மனித உரிமை அரசியல் செயல்பாடுகளில் தொடர்ந்து ஈடுபடக்கூடியவர்.

நவீன கவிதை படைப்புகளால் பெண்ணிய சிந்தனைகளை வளர்த்தவர். பெண்ணிய உரிமைகளை பெற்றுத்தரும் அடையாளக் குரல்களாக இவரின் படைப்புகள் அமைந்திருந்தன.

மைத்ரி 1968ஆம் ஆண்டு இந்திய ஒன்றியப் பகுதியான புதுச்சேரியில், மீனவர் குடும்பத்தில் பிறந்தார்.

தந்தை பெரியார் அவர்களின் தாக்கத்தால் பெண்ணியம் பற்றிய படைப்புகளை எழுதத் தொடங்கியதாக இவர் குறிப்பிடுகிறார். இவரது முதல் வெளியீடான பிரயாணம் என்ற சிறுகதை 1988-ல் முதன்மையான தமிழ் இலக்கிய இதழான கணையாழியில் இடம்பெற்றது. சல்மா மற்றும் சுகிர்தராணி போன்ற பல தமிழ்ப் பெண் எழுத்தாளர்களைப் போலவே 2000களின் முற்பகுதியில் இவர் பிரபலமடைந்தார். இவரது கவிதைகள் பாலினப் பிரச்சினைகளை மீண்டும் மீண்டும் கருப்பொருளாகக் கொண்டு விவரிக்கப்பட்டுள்ளன. சங்கராபரணி (2001), நீரின்றி அமையாது உலகு (2003), நீலி (2005), எனது மதுக்குடுவை (2012), முள்கம்பிகளால் கூடு பின்னும் பறவை (2017), கடல் ஒரு நீலச்சொல் (2019) என்பவை இவரது கவிதைத் தொகுதிகள். பேய் மொழி பெரும் கவிதை தொகுப்பு 2022 இல் வெளி வந்துள்ளது. விடுதலையை எழுதுதல் (2004), நம் தந்தையரைக் கொல்வதெப்படி (2008), வெட்டவெளி சிறை (2014),மார்லின் மன்றோக்கள் (2022) என்பவை இவரது கட்டுரை நூல்கள். இவர் பறத்தல் அதன் சுதந்திரம் (2004) மற்றும் அணங்கு (2005) நூல்களின் தொகுப்பாசிரியர். தமிழில் முதல் பெண்ணிய இதழ் மற்றும் பதிப்பகத்தை உருவாக்கியவர்.

திருமதி இரஹீமா அலாவுதீன்

இவர் சமகால தமிழ் இலக்கியத்தில் சிறந்த கவிஞராக அங்கீகரிக்கப் பட்டவர். மைத்ரி, புதுச்சேரி அரசின் விருது, திருப்பூர் தமிழ்ச் சங்க விருது மற்றும் கவிதைக்கான மாநில விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளார். இவரின் அனகு (பெண்) எனும் வெளியீட்டு நிறுவனம் நைஜீரிய எழுத்தாளர் சிமாமந்த நாகொசி அதிச்சியின் பர்பிள் ரெட் பாப்பி மற்றும் நாம் அனைவரும் பெண்ணியவாதிகளாக இருக்க வேண்டும் போன்ற படைப்புகளை மொழிபெயர்த்துள்ளது.

இத்தகைய பெண்களுக்கு ஏற்படும் அநீதிகளைத் தனது எழுத்துகளின் மூலம் உலகறியச் செய்த எழுத்தாளர், பெண்ணிய சிந்தனையாளர் மாலதி மைத்ரி அவர்களின் எழுத்துப் பணி சிறக்க தென்றல் முல்லைக்குழு வாழ்த்துகிறது.

iPaatti

Chantilly, VA

Saturdays

கூடு

செயல்வழிக் கல்வி | கலைவழிக் கல்வி

ACTIVITY-BASED LEARNING | TRADITIONAL ART FORMS

தனித்துவமான தமிழ்ப் பள்ளி!

Now Hiring Tamil Teachers!

Learn to Speak. Read. Write. Tamil the joyful way!

- தற்காப்புக் கலைகள்
- மரபுக் கலைகள்
- கதைகள்
- கணிதம்
- வாழ்வியல் செயல்பாடுகள்
- பாடல்கள் + விளையாடுகள்

Age 3 to 14 Years Old

SCAN
ENROLL NOW

+1 (703) 966-1633 +1 (703) 901-7904 ipaatti.us

வாசிங்டன் தமிழ்ச்சங்கத்தின் 16ஆவது ஆண்டு தமிழிசை விழா

நமது வாசிங்டன் தமிழ்ச்சங்கத்தின் 16ஆவது தமிழிசை விழா மிகவும் சிறப்பாகத் திட்டமிடப்பட்டுக் கடந்த டிசம்பர் 6ஆம் நாள் மேரிலாந்தில் உள்ள வட அமெரிக்க முருகன் கோவிலின் அரங்கத்தில் நடந்தேறியது. அதன் சிறப்பையும், இத்தனை ஆண்டுகள் நடதப்படத்தைப் பற்றிய குறிப்புகளையும் இந்தக் கட்டுரையில் பகிர்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

2010இல் தொடங்கிய முதலாம் ஆண்டிலிருந்து இந்நிகழ்வுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்துவரும் வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் மேனாள் தலைவர் திரு. நாஞ்சில் பீற்றர் அவர்களின் ஆதரவுடன், தமிழ்ச்சங்கத் தலைவர் திரு. செந்தில்குமார் அவர்களின் தலைமையில் இவ்வாண்டின் தமிழிசை விழா 5 வயதினர் முதல் பெரியோர் வரை கலந்து கொண்ட தமிழிசைப் போட்டிகளுடன் இனிதே நடைபெற்றது. தொடக்கத்திலிருந்தே அனைத்து வேலைகளிலும் ஈடுபட்டிருந்த நமது தமிழ்ச்சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்களின் பங்கு பாராட்டத்தக்கது. திருமதி சீதாலட்சுமி நடராஜன், திருமதி வாணி ராம் மற்றும் திரு. பாபு விநாயகம் ஆகியோர் தமிழிசைப் போட்டிகளுக்கு நடுவர்களாகப் பொறுப்பேற்றுச் சிறப்பாக நடத்திக்கொடுத்தனர்.

பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்து வந்துகொண்டிருந்தாலும் ஒவ்வொரு ஆண்டும் தமிழிசையை மேலும் சிறப்பிக்க நான்காவது ஆண்டு விழாவில் தொடங்கி ஒவ்வொரு ஆண்டும் தன்னார்வலராகவும் இரண்டு ஆண்டுகள் (2015, 2016) நமது தமிழ்ச் சங்கத்தின் இயக்குநராகவும் இவ்விழாவிற்கு முழுப் பொறுப்பேற்று நடத்தி வந்தவர் திரு. பாபு விநாயகம். நமது வாசிங்டன் தமிழ்ச் சங்கத்தின் தமிழிசை விழா அமெரிக்காவின் அனைத்து அமைப்புகளுக்கும் ஒரு முன்னோடியாகவும் சிறந்த எடுத்துக்காட்டாகவும் அமையவேண்டும் என்று அவர் முழுமூச்சுடன் செயல்பட்டு வருகிறார். பத்து ஆண்டுகளுக்கு மேல் தமிழிசைப் போட்டிகளுக்கு நடுவராகவும் அவர் பொறுப்பேற்று வந்துகொண்டிருக்கிறார். நமது தமிழிசை விழாவைச் சிறப்பாக நெறிமுறைப் படுத்தி நடத்தவேண்டும் என்பதற்காக அதற்கான செயல் திட்டத்தை முழுவதுமாக ஆவணப்படுத்திக் கொடுத்தும் உள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் இந்நிகழ்ச்சிக்கு நடுவர்களை ஏற்பாடு செய்து கொடுப்பது, இசை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வது அல்லது கலைஞர்களை அழைத்து வருவது, பாடகர்களுக்கு எந்தெந்த பாடல்களைப் பாடவேண்டும் என்று ஆலோசனை கொடுப்பது, அனைத்துப் பாடல்களுக்கும் இராகம், பண், மற்றும் தாளங்களைக் குறித்துக் கொடுப்பது மட்டுமின்றி தொடர்ந்து நன்கொடையும் வழங்கி வருகிறார். வாசிங்டன் வட்டாரத்தில் தமிழிசைக்கென்று நடத்தப்படும் ஒரே நிகழ்ச்சி இதுதான் ஆகையால் தமிழ்ப் பாடல்களும் தமிழ் சார்ந்த இராகங்களும் பாடப்பட்டு நிகழ்ச்சிக்கு வரும் அனைவருக்கும் அதன் ஒவ்வொரு பகுதியும் ஒரு படிப்பினையாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நிகழ்ச்சியின் ஒவ்வொரு அங்கத்தினையும் கூர்ந்து கவனித்து அதில் தமிழிசைக்கான சிறப்பம்சங்கள் இருக்கவேண்டி ஆவன செய்து வருகிறார்.

தமிழ்த்தாய் வாழ்த்து பாடி முடித்த பின்னர், நமது வாசிங்டன் வட்டாரத்தின் கொம்புக் குழுவினர் நிகழ்த்திய மங்கள இசை நிகழ்ச்சி மிகவும் அருமையாகவும் மிகச்சிறப்பாகவும் நடந்தது. மிகச்சிறப்பு என்று சொல்வதற்குக் காரணம் என்னவென்றால் அந்நிகழ்வில் திரு. சிவசங்கர் பாலசுப்பிர மணியம் அவர்களுடன் அவருடைய மகள் ஜெய்ஹர்ஷினி சிவசங்கர் அவர்கள் தனி நாதசுரத்தில் ஒத்து இசைத்ததை நமது அடுத்த தலைமுறைக் குழந்தைகளுக்கு முன்னோடியாக இதுவரை நம் தமிழிசை விழாவில் நடந்திராத, சரித்திரம் படைத்த ஒரு முத்தாய்ப்பான அங்கம் என்று சொன்னால் அது மிகையாகாது. அதனினும் சிறப்பு அவர் இளைய தங்கை ரேயவர்ஷினி சிவசங்கர் நிகழ்ச்சி முழுவதும்

வெண்கலத் தாளம் தட்டி, தவில் இசைத்த முனைவர் விஜய் முத்துசாமி மற்றும் திரு. கோவிந்தராஜ் அவர்களுடன் மிகச் சரியாகத் தாளத்தைக் கட்டுக்குள் எடுத்துச் செய்தது காணும் கண்களுக்கெல்லாம் இந்தச் செல்லக் குழந்தைக்குள் இவ்வளவு தாளச் செறிவா என்று வியக்கும் வண்ணம் அமைந்திருந்தது. வெறும் பாராட்டுடன் நிறுத்தி விடாமல், நமது தமிழ்ச் சங்கத் தலைவர் அவர்கள் அந்த இரண்டு சகோதரிகளுக்கும் சிறப்புக் கோப்பை வழங்கிச் சிறப்பித்தது உள்ளத்தில் நெகிழ்ச்சி ஏற்படுத்தியது.

செல்வன் அசுவின் பாபு விநாயகம்

நிகழ்ச்சியின் தொடக்கமாக நமது தமிழ்ச் சங்கத்தின் இயக்குநர் என்ற முறையில் அனைவரையும் வரவேற்புரை அளித்து வரவேற்கும் வாய்ப்பு அளிக்கப்பெற்றேன். தமிழிசை விழாவில் நானும் பத்து ஆண்டுகளுக்கு மேல் தன்னார்வலராகப் பணிசெய்து வருவதில் மகிழ்ச்சி அடைகிறேன். சில ஆண்டுகள் போட்டியில் கலந்து கொள்ளாமல் பாடல் மட்டும் பாடி இருக்கிறேன். 2017இல் மருத்துவர் சீர்காழி சிவசிதம்பரம் அவர்களின் இசை நிகழ்ச்சிக்கு எந்த ஒத்திகையும் இன்றி நேரடியாக மேடையில் கிதார் ஒத்திசைத்து அவரிடம் இருந்து பாராட்டைப் பெற்றதில் மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக அவ்வாண்டு தமிழ்ச் சங்கத் தலைவராக இருந்த திரு. இராஜாராம் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த ஆண்டின் தமிழிசை விழாவின் நெறிமுறைகளை முழுவதுமாக மீட்டுருவாக்கம் செய்தேன். பின்னர் திரு. பாபு விநாயகம் மற்றும் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகக் குழுவின் ஒப்புதலைப் பெற்ற பின்னர் பயன்படுத்தினோம். புதிய படிவம் மற்றும் நெறிமுறைகளை வரும் ஆண்டுகளில் தொடர்ந்து பயன்படுத்தப்படும் என்று தலைவர் குறிப்பிட்டிருந்ததோடு அந்தப் படிவத்தை முன்மாதிரியாகத் தமிழ்ச் சங்கத்தின் மற்ற போட்டிகளுக்கும் பயன்படுத்தலாம் என்றும் கூறியிருந்தார்.

இந்த ஆண்டின் தமிழிசை விழாவில் இரண்டு புதிய முன்னெடுப்புகளைத் தலைவர் திரு. செந்தில் குமார் அவர்கள் ஏற்படுத்தினார். அவற்றில் ஒன்று பின்னணி இசைப் பாடல் பிரிவை அறிமுகப்படுத்தியது. அந்தப் பிரிவில் தான் அதிகப்படியான போட்டியாளர்கள் பங்கேற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழிசைப் போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் அனைவருமே வெற்றியாளர்கள் தான். போட்டியின் பொது பங்கேற்பாளர்களின் பாடல் எவ்வாறு அமைந்திருந்தது என்பதைப் பொறுத்து மதிப்பெண் கொடுக்கப்படும்; அதன்படியே வெற்றி பெற்றவர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள் என்று நடுவர் குழுவிலிருந்து அறிவித்திருந்தார்கள் எனினும், தலைவரின் இரண்டாவது முன்னெடுப்பின்படி போட்டியாளர்களை ஊக்கப்படுத்தும் வண்ணம் ஒவ்வொரு பிரிவிலும் பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அதிகப்படியாக ஐந்து பரிசுகளை வழங்கிச் சிறப்பிக்க ஏற்பாடு செய்யப் பட்டது. வெற்றி பெற்ற அனைவருக்கும் சரியான குறிப்புகள் பொறிக்கப்பட்ட கோப்பைகள் வழங்கப்பட்டது. பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. இதை முழுப் பொறுப்புடன் ஏற்பாடு செய்திருந்த தலைவர் அவர்களுக்கு வணக்கங்களுடன் எனது பாராட்டுகள்.

இந்த ஆண்டின் தமிழிசை விழாவில், தமிழிசைப் போட்டியில் ஐம்பதுக்கும் மேலானவர்கள் பங்கேற்றிருந்தனர். 5 வயது முதல் பெரியோர்கள் வரை மூன்று விதமான போட்டிகளில் (செவ்விசை, மெல்லிசை/மக்களிசை, பின்னணி இசை) வயது வரம்பின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாக நடைபெற்றன. அனைத்து பங்கேற்பாளரைப் பற்றிய சிறு குறிப்பினை அவர்களின் நிழற்படத்துடன் ஒளித்திரையில் அவரவர் பங்கேற்கும் நேரத்தில் காண்பித்தோம். இந்தப் போட்டியின் நோக்கம் தமிழிசையை வளர்க்க மற்றும் மக்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதே. பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. போட்டி நெறிமுறைப்படி தூய தமிழ்ச் சொற்களில் ஆன பாடல்களைப் பாடும்படியாக வேண்டிக் கொள்ளப்பட்டார்கள். செவ்விசையில் தமிழ்க் கீர்த்தனைகள், மெல்லிசையில் இலக்கியப் பாடல்கள், பாரதியார், பாரதிதாசன் பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்கள் போன்றவை பாடலாம் என்று குறிப்பிடப் பட்டிருந்தது. பின்னணி இசைப் பாடல்களில் திரைப்படப் பாடல்களிலும் தமிழிசை சார்ந்த (இராக அடிப்படையில்) மற்றும் தூய தமிழ்ச் சொற்களால் அமைந்த பாடல்களைப் பாடுவதற்குப் பங்கேற்பாளர்கள் ஊக்குவிக்கப் பட்டார்கள். கூடிய மட்டும் எல்லாப் பாடல்களுக்கும் நிகழ்ச்சித் தொகுப்பாளரான நான், என் அறிவிப்பின் வாயிலாகப் பகிர்ந்திருந்தேன்.

போட்டிகளின் முடிவில் திரு. நாஞ்சில் பீற்றர் அவர்கள் 2010 முதல் கடந்த 15 ஆண்டுகளாக நமது வாசிங்டன் தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழிசை விழாவின் வரலாறு குறித்த ஆவண அறிக்கையுடன் அனைவருக்கும் எடுத்துரைத்தார். நமது தமிழிசை விழாவின் நோக்கம், இதுவரை நாம் கடந்து வந்த பாதை - போட்டிகள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் இதர விவரங்களைப் பகிர்ந்தார். அவற்றில் பெரும்பாலும்

நான் ஈடுபட்டிருந்ததால் என் நினைவலைகளைத் தூண்டும்படியாக இருந்தது. ஒவ்வொரு ஆண்டும் எவ்வாறு இந்நிகழ்ச்சியை மெருகூட்டி வருகின்றோம் என்று மகிழ்ச்சியாக இருந்தது.

போட்டி முடிந்தபின் நடுவர்களின் இசை நிகழ்ச்சி நடந்தது. திருமதி சீதாலட்சுமி நடராஜன் அவர்கள் காபி இராகத்தில், ஆதி தாளத்தில் அமைந்த திரு. கல்கி கிருட்டிணமூர்த்தியின் "பூங்குயில் கூவும் பூஞ்சோலையில் ஒருநாள்" என்ற பாடலை மிகவும் அருமையாகப் பாடினார். அதைத் தொடர்ந்து என் தந்தை திரு. பாபு விநாயகம் அவர்களும் நானும் நம் சங்க இலக்கியத்திலிருந்து இரண்டு பாடல்களைப் பாடினோம். முதலாவதாக மணமக்களிடையே அமைய வேண்டிய பொருத்தங்கள் பற்றிய தொல்காப்பியத்தின் "பிறப்பே குடிமை" எனத் தொடங்கும் 1215ஆவது நூற்பாவை சிவரஞ்சனி இராகத்தில், ஆதி தாளத்தில் பாடினோம். இதைச் சில ஆண்டுகளுக்கு முன்பு வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப்பேரவையின் வினாடி வினா நிகழ்ச்சிக்காகத் திரு. நாஞ்சில் பீற்றர் ஐயா அவர்கள் கேட்டுக் கொண்டதற்காகத் திரு. பாபு விநாயகம் அவர்கள் இசை அமைத்துப் பாட அதற்கு ஒத்திசை அமைத்து எனது இசையமைப்புக் கூடத்தில் பதிவுசெய்து அனுப்பினேன். இத்தொல்காப்பிய நூற்பாவினை உலகிலேயே முதல் முதலாக இதுபோன்று இசையமைத்துப்பாடி, பதிவுசெய்து வெளியிட்டிருப்பது நாங்கள் தான் என்று பீற்றர் ஐயா அவர்கள் பெருமையுடன் கூறுவார்கள். அடுத்ததாக இறையனார் எழுதியதாக நம்பப்படும் "கொங்குதேர் வாழ்க்கை" என்ற குறுந்தொகையில் இரண்டாவது பாடலை பௌளி இராகத்தில் (பௌளிப் பண்) ஆதி தாளத்தில் திரு. பாபு விநாயகம் இசையமைத்த மெட்டில் பாடினோம். இந்தப் பாடல் 2015இல் வாசிங்டனில் நடந்த குறுந்தொகை மாநாட்டில் திரு. பாபு விநாயகம் அவர்கள் முதலாவதாக மெட்டமைத்துப் பாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறப்பு விருந்தினர்களாக நமது தமிழ்ச் சங்கத்தின் மேனாள் தலைவர் திருமதி கல்பனா மெய்யப்பன் அவர்கள், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப்பேரவையின் மேனாள் தலைவர் திரு. சுந்தர் குப்புசாமி அவர்கள், நமது தமிழ்ச் சங்கத்தின் மேனாள் நிர்வாகக் குழுவின் உறுப்பினர் திரு. செந்தில்முருகன் வேலுச்சாமி அவர்களுடன் திரு. நாஞ்சில் பீற்றர் அவர்களும் வருகை தந்ததோடு வெற்றி பெற்றவர்களுக்குக் கோப்பை மற்றும் சான்றிதழ் வழங்கிச் சிறப்பித்தார்கள். நமது தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. செந்தில் குமார் அவர்கள் மூன்று நடுவர்களுக்கும் அருமையான திருக்குறள் நூலை அன்பளிப்பாக வழங்கிச் சிறப்பித்தார். நமது தமிழ்ச் சங்கத்தின் இயக்குநர் திரு. பிரகாஷ் மாதேஷ் அவர்களின் நன்றி உரையை அடுத்துக் குறித்த நேரத்தில் நிகழ்ச்சி இனிதே நிறைவேறியது.

வெற்றி பெற்றவர்கள்:

செவ்விசை (பிரிவு 1) :

முதல் பரிசு: ஷ்லோகா அரவிந்த்

இரண்டாம் பரிசு: நிவ்ரிதி கார்த்திக்

மூன்றாம் பரிசு: அஷ்மிதா பிரபாகர்

நான்காம் பரிசு: யதுஸ்ரீ ராம்சங்கர்

ஐந்தாம் பரிசு: பிரஜீஷ் பாலசுப்பிரமணி

செவ்விசை (பிரிவு 2) :

முதல் பரிசு: ஆத்யா பெரும்பாலா

இரண்டாம் பரிசு: ஷ்ருதிகா முத்துக்குமரன்

மெல்லிசை (பிரிவு 1):

முதல் பரிசு: கிருஷா பெரும்பாலா

இரண்டாம் பரிசு: குகன் ராஜேஷ்

மூன்றாம் பரிசு: திவ்யபாரதி பிரஷாந்த்

மெல்லிசை (பிரிவு 2):

முதல் பரிசு: யாஷிகா ராஜேஷ்

மெல்லிசை (பிரிவு 3):

முதல் பரிசு: சித்ரா தங்கவேலு

இரண்டாம் பரிசு: தீபிகா மாரியப்பன்

மூன்றாம் பரிசு: விஜயலட்சுமி வெங்கடராமன்

பின்னணி இசை (பிரிவு 1):

முதல் பரிசு: ஹர்ஷினி தங்கவேலு

இரண்டாம் பரிசு: யாதித் ஜயதனராஜ்

மூன்றாம் பரிசு: சர்வேஷ் சதீஷ்

பின்னணி இசை (பிரிவு 2):

முதல் பரிசு: நிஹாரிகா கிஷோர் சிங்

இரண்டாம் பரிசு: அத்விகா பரத்

மூன்றாம் பரிசு: அனன்யா ஜகந்நாதன்

பின்னணி இசை (பிரிவு 3):

முதல் பரிசு: பத்மா கிரிதர்

இரண்டாம் பரிசு: கிஷோர் சிங்

மூன்றாம் பரிசு: கோமதி சாய்ராம்

நான்காம் பரிசு: ஷாந்தி ராஜாபாண்டி

ஐந்தாம் பரிசு: நாராயணி நடராஜன்

நமது தமிழ்ச்சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் திரு. செந்தில் மலைக்கொழுந்து குமார், திரு. பிரகாஷ் மாதேஷ், திரு. அஷ்வின் விநாயகம், திரு. அறிவுடைநம்பி புகழேந்தி, திருமதி தீபா செந்தில்நாத், மற்றும் திருமதி காமேஷ்வரி சந்திரசேகர் ஆகிய அனைவரும் வருகை தந்திருந்தார்கள்.

குழந்தைகள் தின விழா

துள்ளிடும் மான்கள்,
இல்லத்தின் இனிமைகள்,
இனித்திடும் கரும்புகள்,
கள்ளமில்லா கலைவான வரங்கள்—

நம் இல்லங்களிலும் உள்ளங்களிலும் விளையாடிக் கொண்டிருக்கும் நம் குழந்தைகளின் மகத்தான தினமே குழந்தைகள் தினம். அத்தகைய சிறப்பு வாய்ந்த குழந்தைகள் தின விழா, வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் நவம்பர் 16, 2025 அன்று மதியம் 12.30 மணியளவில், பார்க் வியூ உயர் நிலைப் பள்ளியில் மிகுந்த உற்சாகத்துடனும் கோலாகலத்துடனும் நடைபெற்றது.

திருமதி கல்பனா சுப்ரமணியம்

விழாவின் தொடக்க நிகழ்வாக, குழந்தைகளின் மாறுவேடப் போட்டி நடைபெற்றது. 5 முதல் 12 வயது வரையிலான பல குழந்தைகள் இதில் ஆர்வமுடன் பங்கேற்றனர். அவர்களின் படைப்பாற்றலும் தன்னம்பிக்கையும் பராட்டுக்குரியதாக அமைந்தது. போட்டியில் பங்கேற்ற அனைத்து குழந்தைகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்தின் கீழ் இயங்கும் அனைத்து தமிழ்ப் பள்ளிகளிலிருந்தும் குழந்தைகள் கலந்து கொண்டு அழகிய நடனங்களால் அனைவரையும் கவர்ந்தனர்.

மேலும் சிலம்பாட்டம், பறை போன்ற பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் நம் கண்களுக்கு விருந்தாக அமைந்தன. அடுத்ததாக, திருக்குறள் அடிப்படையிலான ஒரு சிறப்பு குறும்படம் வெளியிடப்பட்டது. திருக்குறள் உலகின் பல நாடுகளில், பல மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். அதனைத் தொடர்ந்து, ‘தென்றல் முல்லை’ புத்தக வெளியீட்டு விழா முதன்மை ஆசிரியர் முனைவர் பாலா

குப்புசாமி வழி நடப்பில் நடைபெற்றது. தென்றல் முல்லை ஆசிரியர்கள் மற்றும் நம் வட்டாரத் தமிழ் ஆர்வலர்கள் முன்னிலையில் இந்த வெளியீடு சிறப்பாக நடைபெற்றது. பின்பு, வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத் தின் கீழ் இயங்கும் தமிழ்ப் பள்ளிகளின் அணிவகுப்பு நடைபெற்றது.

அதில் பங்கேற்ற பள்ளிகள்:

- பாரதியார் தமிழ்ப்பள்ளி
- பிரடெரிக் தமிழ்ப்பள்ளி
- மேரிலேண்ட் தமிழ்க்கல்விக் கழகம்
- டேலண்ட் தமிழ்ப்பள்ளி
- கூடு தமிழ்ப்பள்ளி
- சங்கமம் தமிழ்ப்பள்ளி
- வள்ளுவன் தமிழ் மையம்

இதனைத் தொடர்ந்து, இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர்களாக திரு. மதுரை முத்து மற்றும் திருமதி அன்ன பாரதி அவர்களின் நகைச்சுவை நிகழ்ச்சி நடைபெற்றது. மதுரை முத்து அவர்களின் பேச்சு அனைவரையும் சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்தது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் இடம் பெயராமல் இரசிக்க வைத்த அற்புதமான நிகழ்ச்சியாக அது அமைந்தது. அதுமட்டுமின்றி, அவர்களின் தலைமையில் ஒரு சிறிய நகைச்சுவைப் பட்டிமன்றமும் நடைபெற்றது. குழந்தைகளை மகிழ்விக்கும் வகையில் பல சிறிய போட்டிகளும் நடத்தப்பட்டன. விழாவின் நிறைவுப் பகுதியில், டபுள் ட்ரிபிள் குழந்தைகளின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. அவர்கள் பாடிய பாடல்கள் 80-90 கால நினைவுகளை மீண்டும் உயிர்ப்பித்தன. இந்நாட்டில் பிறந்து வளர்ந்த குழந்தைகள் தமிழ்ப் பாடல்களை அழகாகப் பாடி அனைவரையும் இசைக் கடலில் மூழ்கடித்தனர். இவ்வாறு, குழந்தைகளுக்காக, குழந்தைகளால் கொண்டாடப்பட்ட இந்தக் குழந்தைகள் தின விழா, காலை முதல் இரவு 8 மணி வரை மிகச் சிறப்பாக நடைபெற்று, நன்றியுரையுடன் இனிதே நிறைவடைந்தது.

KALPASI
INDIAN CUISINE
FLAVORS OF CHETTINAD

சிறுகதை

படைப்பும் படைப்பாளியும்

கந்தர்வன் அவர்களின் "சாசனம்"

கந்தர்வன் (பிப்ரவரி 3, 1944 – ஏப்ரல் 22, 2004) ஒரு தமிழ் எழுத்தாளர். முற்போக்கு இலக்கிய அழகியலைச் சார்ந்து எழுதியவர்.

மாடு மேய்த்து, துணிக்கடை மற்றும் மளிகைக் கடைகளில் வேலை பார்த்து, படித்து அரசாங்க வேலையில் சேர்ந்து, பல்வேறு ஊர்களில் வாழ்ந்து, சென்னைக்கு வந்த நாகலிங்கம் என்ற தொழிற்சங்கவாதியின் புனைப் பெயர்தான் கந்தர்வன்.

ஒரு முற்போக்கு கவிஞராக அறியப்பட்டாலும், கந்தர்வன் ஒரு மிகச் சிறந்த கதை சொல்லி. "என் கவிதைகள் மிகுந்த இலக்கியத் தரம் வாய்ந்தவை, அவை இலக்கியமாக அலங்கரிக்கப்பட வேண்டும் என்று நான் கவலைப்படுவதில்லை. எளிய மொழியில் மக்களுக்கு கருத்துகளை எடுத்துச் சொல்லும் கருவியாகத்தான் நான் கவிதையைப் பயன்படுத்துகிறேன்" என்று கந்தர்வன் கூறியுள்ளார்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் துணைத் தலைவராக இருந்து இறுதிவரை தொண்டாற்றியவர். அவசர நிலைக் காலத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்டு, பின்னர் மீண்டும் பணியேறியவர். வாழ்நாள் முழுவதும் ஒரு இலக்கியப் போராளியாக வாழ்ந்தவர்.

இந்த இதழில் நாம் விவாதிக்கும் "சாசனம்" என்ற சிறுகதை, இந்திய தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் (NFDC) வழங்கிய நிதி உதவியுடன் இயக்குநர் மகேந்திரன் அவர்களால் திரைப்படமாக உருவாக்கப்பட்டு, ஜூலை 28, 2006 அன்று வெளியிடப்பட்டது. அரவிந்த் சாமி மற்றும் கௌதமி நடித்த இந்தப் படத்தின் காட்சிகளை என்னால் தற்போது இணையதளத்தில் காண முடியவில்லை. நண்பர்கள் யாரேனும் கண்டுபிடித்தால் பகிருங்கள்.

திரு. கமலபாரதி பச்சியப்பன்

"அப்பா வெளியூருக்குப் போகையில் வண்டிக்குள் யார் பேச்சுக் கொடுத்தாலும், எவ்வளவு முக்கியமாக அது இருந்தாலும் தலையை வெளியே நீட்டி அந்தப் புளிய மரத்தை ஒரு தடவை பார்த்துக் கொள்வார்." இப்படித் தொடங்குகிறது இந்தக் கதை.

இந்தக் கதை ஒரு புளியமரத்தை மையமாகக் கொண்டு, தலைமுறை தலைமுறையாக வந்த அதிகாரம், சொத்துரிமை, குற்ற உணர்வு மற்றும் அடக்குமுறையின் வரலாற்றைக் கூறுகிறது.

இந்தக் கதை ஒரு நபரால் விவரிக்கப்படும் (narrative style) முறையில் புனையப்பட்டுள்ளது. இந்தக் கதை சொல்லுபவரின் தாத்தா, சமஸ்தான காலத்தில் பேஷ்காராக (வரி வசூல் செய்பவர்) இருந்து, அரசனின் ஆதரவால் பல கிராமங்களில் நிலங்களைப் பெற்றவர். அந்த நிலங்களைப் பெறும் போது, குடியானவர்களை விரட்டியடித்ததோடு, வன்முறைகளும் நிகழ்ந்தன; ஒரு சில மரணங்களும் நடந்ததாகப் பேச்சு உண்டு.

தாத்தா எங்கு தங்குகிறார் என்பதே தெரியாத வாழ்க்கை வாழ்ந்தவர். அது அவருடைய ஒழுக்கமற்ற அதிகார வாழ்க்கையின் ஒரு குறியீடாக இருக்கிறது. தாத்தாவின் மரணத்துக்குப் பிறகு, அந்த நிலங்களும் அதிகாரமும் அப்பாவிடம் வந்தன.

அப்பா தாத்தாவைப் போல கொடூரமானவர் அல்ல. அப்பாவுக்கு எல்லா நிலங்களிலும் மிகப் பிடித்தது, ஊர்க்கோடியில் இருக்கும் ஒரு பிரம்மாண்டமான புளியமரம். அது குறவர் குடிசைகளுக்கு நடுவே இருந்தாலும்,

ஆண்டுதோறும் அதன் புளியம்பழங்களை அப்பா தனது சொத்து போலவே உலுக்கி எடுத்துச் செல்வார்.

அந்த மரம் தாத்தாவின் சாசனங்களிலும் பத்திரங்களிலும் எங்கும் பதிவு செய்யப்படவில்லை என்ற உண்மை, அப்பாவை உள்ளுக்குள் கலக்கத்தில் ஆழ்த்துகிறது. அதனால் அவர் "போகிற வரை போகட்டும்" என்று அதிகாரத்தைத் தொடர்கிறார். இது பல நிலக்கிழார்களின் மனநிலையை பிரதிபலிக்கிறது.

மரத்தடியில் வாழும் குறவர் கிழவியும் அவள் மகளும் அந்த மரத்தை தெய்வம் போல் வழிபடுகிறார்கள். ஆண்டுதோறும் உலுக்கலுக்கு முன் கிழவியின் மகள் கிழவியின் கையைப் பிடித்துக் கொண்டு வந்து மரத்தருகில் நிறுத்துவாள். கிழவி மரத்தைத் தொடுவாள்; தடவுவாள்; கும்பிடுவாள். குருட்டுக் கண்ணிலிருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் வடியும். மகள் மெல்லக் கிழவியை அகற்றி அழைத்துக் கொண்டு குடிசைப் பக்கம் போவாள். அப்பா இதையெல்லாம் பார்த்தும் பார்க்காதது போல நிற்பார்.

ஒவ்வொரு வருடமும் நடக்கும் புளியம்பழ உலுக்கல், வெளிப்படையில் ஒரு விவசாயச் சடங்கு ஆனால் உள்ளுக்குள் ஒரு அடக்குமுறை நாடகம். புளியம்பழ உலுக்கலின் போது அப்பாவைப் பார்த்து பயமும் மரியாதையும் கலந்த அணுகுமுறையைக் காட்டுகிறார்கள் குறவர் கிழவியும் அவள் மகளும். ஆனால் அப்பாவோ ஒரு சின்னக் குவியலை மட்டும் காலாலேயே குவித்து ஒதுக்குவார்.

அது ஒரு பண்ணையார் மனப்பான்மையின் உச்சம். அந்தக் கிழவியின் பெண் வந்து ஒதுக்கப்பட்ட புளியை அள்ளிக் கொள்வாள். அள்ளும்போது அவள் கண்ணில் இருந்து கண்ணீர் வடியும்.

ஒரு வருடம், அந்தக் கிழவியின் மகளின் கணவன் அப்பாவை எதிர்த்துப் பேச, அப்பா அந்த எதிர்ப்பை புறந்தள்ளிச் செல்கிறார். ஆனால் அடுத்த வருடம் குறவர் மக்கள் அனைவரும் ஒன்றுகூடி இருக்கையில், "இந்த மரத்தை இனிமேல் நான்தான் உலுக்குவேன். இதில் எனக்குப் பங்கு உண்டு" என தாத்தாவின் சாயலில் உள்ள கிழவியின் பெண் வெளிப்படையாகக் கூறுகிறார்.

இங்கேதான் பல ஆண்டுகளாக இருந்த மௌனம் உடைகிறது. பாமரனின் இயலாமையை, மானமிகு வாழ்வைச் சுரண்டும் அதிகார வர்க்கம், உண்மை வெளிவரும்வேளை எவ்வாறு தலையைக் குனிந்து நடுங்குகிறது என்பதைக் காட்சிப்படுத்துகிறது இந்தப் பகுதி.

எப்ஸ்டீன் பைல்ஸ் உங்களுக்கு நினைவிற்கு வந்தாலும், அது என் பொறுப்பல்ல!

அதன்பிறகு, அப்பா சாசனங்களையும் பத்திரங்களையும்பார்க்கவே இல்லை. அதிகாரத்தாலும் பழக்கத்தாலும் தன்னால் அடைய முடியும் என நம்பிய ஒரு மரம், உண்மையில் அடக்குமுறையாலும் மௌனமாக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையாலும் சூழப்பட்டிருந்தது என்பதை அவர் உணர்கிறார்.

இந்தக் கதை, மனசாட்சியின் குற்ற உணர்வு மற்றும் சமூக அநீதியை ஆழமாக வெளிப்படுத்துகிறது.

மேலும், இந்தக் கதை மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட சதுர்வேதி மங்களம் எனும் வழக்கத்தையும், குறிப்பாக பாபநாசம் அருகே உள்ள உத்தமதானபுரம் என்ற ஊரின் வரலாற்றையும் நினைவுபடுத்துகிறது.

"ஒரு மராத்திய மன்னன் தஞ்சைப் பகுதியை ஆண்டு வரும்போது, ஏகாதசி நாள் என்று அறியாமலே உணவும் தாம்பூலமும் (வெற்றிலை-பாக்கு) எடுத்துக் கொண்டான். ஏகாதசி என்பது வழிபாடும் விரதமும் கடைப்பிடிக்க வேண்டிய நாள் என்பதால், அதை மீறியதற்கான பரிகாரமாக, அவன் 80 வேத அறிஞர்களுக்கு ஒரு அக்ரஹாரத்தை (பிராமணர் குடியிருப்புத் தெரு) நிறுவினார். அவர்களில் ஒவ்வொருவருக்கும் ஒரு வீடும், 10 வேலி நிலமும் அளிக்கப்பட்டது.

இந்த தானத்தின் மகத்துவத்தை வெளிப்படுத்தும் விதமாக, அந்த ஊருக்கு "உத்தமதானபுரம்" என்று பெயரிட்டார். அந்த உத்தமதானபுரம்தான், டாக்டர் உ . வே. சாமிநாத ஐயர் அவர்களின் சொந்த ஊர்!"

மேலோட்டமாகப் பார்த்தால், இந்த தானம் ஒரு சடங்கு போல் தோன்றினாலும், யார் நிலத்தை, யார், யாருக்கு கொடுப்பது என்ற எண்ணம் தோன்றாமல் போகவில்லை.

"கோவில்கள் கூடாது என்பது எங்கள் எண்ணம் அல்ல. ஆனால், கோவில் கொடியவர்களின் கூடாரமாக மாறக் கூடாது" எனும் வசனம் தான் நினைவிற்கு வருகிறது.

இந்த சாசனம் கதையில், ஒரு சமஸ்தானத்தில் நடந்த நில அபகரிப்பு விவரிக்கப்பட்டுள்ளது. காஞ்சி காமகோடி இணையதளத்தில் (கீழே இணைய விவரங்கள் உள்ளன) 101 சதுர்வேதி மங்களங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த இணையதளத்தில் கொடுக்கப்பட்ட விவரங்கள் உண்மையெனில், அந்த 101 கிராமங்களில் சொத்துகளை இழந்த மக்களுக்கான சமூக நீதி எப்போது கிடைக்கும் என்ற கேள்வி எழுகிறது. வாசிங்டன் வட்டார வாசகர்களுக்கு இதனால் மேலும் பல கேள்விகள் எழலாம். இன்னும் பல தரவுகளைத் தேடிப் பெறலாம். சமூக நீதியின் அவசியத்தை மீண்டும் மீண்டும் இலக்கியங்கள் தெளிவாகவே உணர்த்துகின்றன! அதை வாசகர்களாகிய நாமும் உணர்கிறோம்.

கதை மூலம்:

https://www.sirukathaigal.com/%E0%AE%9A%E0%AE%BE%E0%AE%9A%E0%AE%A9%E0%AE%AE%E0%AF%8D/

https://www.tamilwriters.in/2021/06/blog-post_11.html

தரவுகள்:

https://www.kamakoti.org/kamakoti/articles/Chaturvedi-Mangalam.html

https://tamilandvedas.com/2017/08/06/a-few-anecdotes-about-tamil-savant-u-ve-sa-post-no-4135/

UNIEX
COURIER
BUY & SHIP 4 U
Proud Courier Partner Of World Tamil Conference , USA
பொங்கல் விழா வாழ்த்துகள்
Offer Discount Code SATS
TAMILNADU TO USA COURIER
10kg Rs 875 per kg
13kg Rs 800 per kg
30kg Rs 750 per kg
+91 93808 39266
www.uniexcourierandcargo.com
COURIER
CARGO
PACKERS & MOVERS
BAGGAGES
•Best Price •Pickup Facility •Live Tracking
Packing Facility •Reliable Service •Customer Service
* DELIVERY 4 TO 7 DAYS

உலகத் தமிழிசைப் பல்கலைக்கழகம்

World Tamil Music University

(தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)

IDS
Innovative Dynamic Solutions Global Inc.

ISOME

உலகத் தமிழிசை மேம்பாட்டு மையம்
WORLD TAMIL MUSIC DEVELOPMENT CENTER



BABU VINAYAGAM
PRESIDENT

Office:
13800 Coppermine Rd,
Herndon, VA - 20171
www.idsglobalinc.com

Email:
babu@idsglobalinc.com
Work: 703-880-6749
Mobile: 703-939-5465

SELVAM

DEMOCRAT FOR
MONTGOMERY COUNTY COUNCIL
AT-LARGE

I am a U.S. Air Force veteran who served in Afghanistan, an emergency room doctor, and a humanitarian worker. I have dedicated my life to service and leadership when it matters most.

Join me in building a brighter future, for our children, our seniors, and our entire community. I promise to bring courageous advocacy and compassionate leadership, focused on solutions that have a real, measurable impact on your life.

I'm participating in Public Financing and I need many small donations to be successful. Thank you!

Please donate here:
www.prabuselvam.com

Don't forget to vote in June 2026!

Authorized by Prabu Selvam for Montgomery County
Ankit Aggarwal, Treasurer